# விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்

## (ரோமர் நிருபத்திற்கு ஒரு அறிமுகம்)

எம்.எஸ்.வசந்தகுமார்

அப்போஸ்தலனாகிய பவுலின் நிருபங்களில் அதிகளவு அதிகாரங்களைக் கொண்ட புத்தகமாகவும், கிறிஸ்தவ மார்க்கத்தின் அடிப்படை உபதேசத்தைக் கிரமமான முறையில் அறியத்தரும் ஆவணமாகவும், அவர் ரோமருக்கு எழுதிய நிருபம் உள்ளது. இந்நிருபத்தில், பாவியான மனிதனால் எப்படி பரிசுத்தமான தேவனுக்கு முன் நீதிமானாக நிற்க முடியும்? என்னும் மனிதனின் அடிப்படை ஆன்மீகக் கேள்விக்கான பதிலைப் பவுல் விளக்கமாக எழுதியுள்ளார். பாவியான மனிதன் இயேசுகிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசம் அவனைத் தேவனுக்கு முன் நீதிமானாக நிற்க வைக்கின்றது என்னும் கிறிஸ்தவ மார்க்கத்தின் சத்தியத்தை இந்நிருபம் உலக மக்களுக்கு அறியத்தருகின்றது. உண்மையில் இதுவே கிறிஸ்தவம் உலகத்திற்கு அறிவிக்கும் நற்செய்தியாகும்.

உலக மாந்தர் அனைவரும் பாவிகளாகவே இருக்கின்றனர்.[1] இதனால் மனிதரால் பரிசுத்தமான தேவனோடு தொடர்பு கொள்ள முடியாமல் உள்ளது (ஏசா.59:2).[2] இந்நிலையை மாற்றி, மனிதருக்கும் தேவனுக்கும் இடையில் ஒரு உறவை ஏற்படுத்துவதற்காக, மனிதர்களுடைய பாவத்தைப் போக்கும் பலியாக இயேசுகிறிஸ்து தம்மைத் தாமே சிலுவையில் பலியாக்கினார்.[3] இதனால், இயேசுகிறிஸ்து தனக்காக மரித்தார் என்பதைத் தனிப்பட்ட ரீதியாக விசுவாசித்து, தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி இயேசுகிறிஸ்டதுவிடம் மன்னிப்புக்காய் மன்றாடுபவனுடைய பாவத்தை அவனிலிருந்து எடுத்துப் போடும் இயேசுகிறிஸ்து, அவனுக்குத் தம்முடைய நீதியைக் கொடுக்கின்றார். எனவே, மனந்திரும்பிய பாவி இயேசுகிறிஸ்துவின் நீதியைப் பெற்றுக் கொண்ட நிலையில் தேவனோடு ஜீவனுள்ள உறவுக்குள் வந்தவனாக அவருக்கு முன்பாக நீதிமானாக நிற்கின்றான். இதுவே விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்று ரோமர் நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரோமர் நிருபத்தில் கிறிஸ்தவத்தின் இந்த அடிப்படை உபதேசம் விரிவான விளக்கத்துடன் எழுதப்பட்டுள்ளமையால், இது மனுக்குலத்திற்கான தேவனுடைய நற்செய்தியைக் கொண்ட புத்தகமாக உள்ளது.[4] ரோமர் நிருபத்தின் பெரும்பாலான பகுதி பவுல் பிரசங்கித்து வந்த சுவிசேஷச்

---

[1] உலக மாந்தர் அனைவரும் முதல் மனிதனாகிய ஆதாமின் சந்ததியாராக இருப்பதனால் (அப்.17:26), மனிதர்கள் அனைவரும் பிறவியிலேயே பாவிகளாக இருக்கின்றனர் (ரோ.5:12, 5:17-18).

[2] மானிட பாவம் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே பிரிவை ஏற்படுத்தியுள்ளதை ஏசாயா 59:2 அறியத்தருகின்றது.

[3] இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலி மனிதர்களுடைய பாவத்திற்கான பலி என்பதை எபேசியர் 1:7, கொலோசெயர் 1:14, எபிரேயர் 9:12 போன்ற வசனங்கள் அறியத்தருகின்றன. உண்மையில் இயேசுகிறிஸ்துவின் இரத்தமே மனிதருடைய சகல பாவங்களையும் நீக்கி அவர்களைச் சுத்திகரிக்கின்றது (1யோவா.1:7). அதேசமயம், இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்தினால் மனிதரைத் தேவனோடு ஒப்புரவாக்கியுள்ளதைப் பற்றி ரோமர் 5:10, 2கொரிந்தியர் 5:18-19, எபேசியர் 2:13-16 போன்ற வசனங்கள் அறியத்தருகின்றன.

[4] கி.பி.16ம் நூற்றாண்டில் வாழ்ந்த சபை சீர்திருத்தவாதியான மாட்டின் லூத்தர் இந்நிருபத்தை “தூய்மையான நற்செய்தி” என்றும், “பரலோகத்திற்கான வாசல்” என்றும் வர்ணித்துள்ளார்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

செய்தியின் விவரணமாக இருப்பதனால், இது “பவுலின் உபதேச அறிக்கை”[5] என்றும், “பவுலினுடைய இறையியல் சிந்தனைகளின் தொகுப்பு”[6] என்றும், “கிறிஸ்தவ மார்க்கத்தின் சுருக்கவுரை”[7] என்றும் அழைக்கப்படுகின்றது. உண்மையில் இந்நிருபத்தி லேயே “கிறிஸ்தவ சுவிசேஷம் தெளிவாகவும் விளக்கமாகவும் எழுதப்பட்டுள்ளது.”[8]

“அப்போஸ்தலனாகிய பவுல் வேறு நிருபங்கள் எதுவும் எழுதாமல் ரோமர் நிருபத்தை மட்டுமே எழுதியிருந்தாலும்கூட அவர் இன்று வரை கிறிஸ்தவ உலகில் நிலைத் திருக்கும் உன்னத மனிதராகவே இருந்திருப்பார்.”[9] ஏனென்றால், இந்நிருபம் உண்மையான சுவிசேஷத்தை அறிந்துகொள்வதற்கான புத்தகமாகவும், சரியான சத்தியத்தை இனங்கண்டுகொள்ள உதவும் கருவியாகவும் உள்ளது.[10] “கிறிஸ்தவ இறையியலிலும், கிறிஸ்தவ விசுவாச வாழ்விலும் இந்நிருபத்தைப் போல தனது முத்திரையைப் பதித்துள்ள புத்தகம் வேதாகமத்தில் வேறெதுவுமில்லை.”[11] இந்நிருபம் பாவியான பலரது வாழ்வைப் பரிசுத்தமுள்ளதாக்கியுள்ளதோடு, உலகக் கிறிஸ்தவச் சபையின் சரித்திரத்தில் முக்கிய திருப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. உண்மையில், “கிறிஸ்தவ சரித்திரத்தின் முக்கியமான காலகட்டங்களில் இந் நிருபத்தின் வல்லமை வெளிப்பட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம்.”[12] கிறிஸ்தவ உலகில் “தூய ஒகஸ்டீன்’’ என்று இன்றுவரை புகழப்படும் கி.பி.4ம் நூற்றாண்டைச் சேர்ந்த சபைப் பிதாவான ஒகஸ்டீன் என்பவர் இரட்சிக்கப்படுவதற்கு ரோமர் நிருபத்தின் வசனங்களே காரணமாய் இருந்தன. ஒழுக்கக்கேடான முறையில் வாழ்ந்து வந்த இவர், அக்காலத்தில் இருந்த தத்துவப் போதனைகளில் தன் மனதைச் செலுத்தி அதன் மூலம் தனது பாவ வாழ்விலிருந்து விடுபடமுற்பட்டார். ஆனால் அவரது முயற்சிகள் எதுவும் பலனளிக்காத நிலையில், தோல்வியுடனும் விரக்தியுடனும் இத்தாலியிலுள்ள “மிலான்’’ என்னுமிடத்திலிருந்த தோட்டமொன்றில் இருக்கும்போது (கி.பி.386ல்) “எடுத்த வாசி” என்று ஒரு சிறுவன் கூறுவதைப் பல தடவைகள் கேட்டார். இதை, வேதாகமத்தை வாசிக்கும்படியான தேவகட்டளையாகக் கருதிய ஒகஸ்டீன், வேதாகமத் தை வாசிக்கத் தொடங்கினார். அன்றைய தினம் அவர் வாசித்த வேதப் பகுதி ரோமர் 13:13-14 ஆகும்.[13] இவ்வசனங்கள் ஒகஸ்டீனுடைய இதயத்தை உருவக் குத்தியமை யால் தனது பாவவாழ்க்கையைப் பற்றி மனமுடைந்து தனது பாவத்தைத் தேவனிடம்

---

[5] G.G.Findlay, *The Epistles of Paul*, p. 137.

[6] M.Goguel, *The Birth of Christianity*, p. 316.

[7] 16ம் நூற்றாண்டு கிறிஸ்தவ சபைச் சீர்திருத்தவாதிகள் இவ்வாறே ரோமர் புத்தகத்தை வர்ணித்தனர்.

[8] A.Nygren, *Commentary on Romans*, pp. 1-9.

[9] F.Godet, *Commentary on St. Paul’s Epistle to the Romans*, p. x.

[10] G.B.Wilson, *Romans: A Digest of Reformed Comment*, p. 11.

[11] J.R.Edwards, *Romans: New International Biblical Commentary*, p. 1.

[12] L.Morris, *Romans: The Pillar New Testament Commentary*, p.

[13] ரோமர் 13:13-14ல், “களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள் போல சீராக நடக்கக்கடவோம். துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்றுக்கொண்டதோடு, பிற்காலத்தில் கிறிஸ்தவ சபையின் முக்கியமான தலைவர்களில் ஒருவராக மாறினார்.[14]

பாவியான ஒகஸ்டினைத் தூய ஒகஸ்டினாக மாற்றிய ரோமர் நிருபம், பாரம்பரியப் போதனைகளும், சடங்காச்சாரங்களும் கிறிஸ்தவ சபையைச் சிறைப்படுத்தியிருந்த காலத்தில், மறுபடியுமாக சரியான சத்தியத்தை மனுக்குலத்திற்கு அறிவிப்பதற்கும் காரணமாய் இருந்துள்ளது. கி.பி.16ம் நூற்றாண்டில் சபையில் சீர்த்திருத்தத்தை ஏற்படுத்திய மாட்டின் லூத்தரின் வாழ்வு மாற்றமடைந்து, அவர் சபையைச் சீர்திருத்த காரணம், அவர் ரோமர் நிருபத்தின் மூலம் கிறிஸ்தவ மார்க்கத்தின் சரியான உபதேசத்தை அறிந்து கொண்டதேயாகும். ஜேர்மனியிலுள்ள "விட்டன்பேர்க்" பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ இறையியலில் கலாநிதிப் பட்டம் பெற்று, அங்கு வேதாகமத்தைப் போதிக்கும் விரிவுரையாளராக இருந்த மாட்டின் லூத்தர், வேதாகம வசனங்களை ஆழமாக ஆராய் முற்பட்டபோது பெரும் ஆன்மீகப் போராட்டங்களுக்கு உட்பட்டார். கடுமையான ஒழுக்க நெறியுடன் வளர்க்கப்பட்டு, துறவுமடத்தில் கட்டுப்பாடுகளுடன் பரிசுத்தமாக வாழ்ந்து வந்த லூத்தர், வேதவாக்கியங்களை ஆராய்ந்தபோது தேவன் மக்களிடம் எதிர்பார்க்கும் நீதிக்கும், தன்னுடைய சுயநீதிக்கும் இடையில் பாரிய வேறுபாடு இருப்பதைக் கண்டுகொண்டார். அதேசமயம், மக்களிடம் நீதியை எதிர்பார்க்கும் தேவன், கிருபையும் அன்பும் நிறைந்தவர் என்பதையும் மாட்டின் லூத்தர் வேதாகமத்தின் மூலம் அறிந்து கொண்டபோது அவரது ஆத்மீகப் போராட்டம் அதிகரித்தது. ஆனால், அவர் ரோமர் 1:17ஐ ஆராய்ந்து படிக்கும் போது, "இயேசுகிறிஸ்துவில் மனிதன் வைக்கும் விசுவாசமே, தேவனுக்கு முன்பாக அவனை நீதிமானாக்குகிறது" என்னும் உண்மையைக் கண்டுகொண்டார். இதனால், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட மாட்டின் லூத்தர், தனது ஆத்மீகப் போராட்டம் நீங்கியவராக, உள்ளான மனச்சமாதானத்தையும் அனுபவித்தார். உண்மையில், ரோமர் 1:17ன் மூலமாக, சபையின் சடங்காச்சாரங்கள், ஆசாரமுறைகள், ஆச்சிரம துறவறவாழ்வு என்பன மனிதனை நீதிமானாக்காது என்பதை அனுபவரீதியாக மாட்டின் லூத்தர் அறிந்து கொண்டார். இதனால் கி.பி.1517ல் சபையைச் சீர்திருத்தும் பணிகளை ஆராம்பித்தார். இது கிறிஸ்தவ சபையின் சரித்திரத்தையே மாற்றிவிட்டது.[15]

கிறிஸ்தவ சபையின் சீர்திருத்தத்திற்கு மட்டுமல்ல, சபையின் மறுமலர்ச்சிக்கும் பவுல் ரோமருக்கு எழுதிய நிருபமே காரணமாய் உள்ளது. "மெதடிஸ்ட்" சபையின் ஆரம்ப கர்த்தாவான ஜோன் வெஸ்லி, மனமுடைந்து சோர்வடைந்திருந்த நிலையில் 1738ம் ஆண்டு மே மாதம் 24ம் திகதி லண்டன் நகரில் நடைபெற்ற கூட்டமொன்றிற்குச்

---

[14] கி.பி.387ல் ஞானஸ்நானம் பெற்ற ஒகஸ்டீன் 395ல் வட ஆபிரிக்க சபையின் தலைவராகினார். 395 முதல் 430 வரை "ஹிப்போப்" என்னுமிடத்திலிருந்த சபையின் தலைவராகப் பணிபுரிந்தார். பல கிறிஸ்தவ இறையியல் நூல்களை எழுதியுள்ள இவர், ரோமன் கத்தோலிக்கச் சபையினரால் "தூய ஒகஸ்டீனாகக்" கருதப்படுவதோடு, 16ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகளின் வாழ்விலும் தனது புத்தகங்க ளின் மூலம் பெரும் செல்வாக்கு செலுத்தியுள்ளார் (J.D.Woodbridge, ed., *Great Leaders of the Christian Church*, pp. 85-90; G.Hanks, *70 Great Christians Changing the World*, pp. 50-54).

[15] மாட்டின் லூத்தரின் சீர்திருத்தப் பணியின் விளைவாகவே, சடங்காச்சாரங்களுக்கும் மானிடப் பாரம்பரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்துவந்த ரோம சபையியின் ஆதீக்கத்திலிருந்து கிறிஸ்தவ சபை விடுபட்டு சீர்திருத்த புரட்டஸ்தாந்து சபைகள் உருவாகின.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

சென்றார். அங்கு ரோமர் நிருபத்திற்கு மாட்டின் லூத்தர் எழுதிய முகவுரையிலிருந்து ஒரு பிரசங்கம் செய்யப்பட்டது. இச்செய்தி வெஸ்லியினுடைய ஆன்மீகக் கேள்விகளுக்கு பதிலாய் அமைந்ததோடு, அவரை இரட்சிப்புக்குள்ளும் வழிநடத்தியது. இதைப் பற்றி அவர் தன்னுடைய நாட்குறிப்பில் "என் இதயம் உஷ்ணமடைவதை உணர்ந்தேன். இரட்சிப்புக்காக இயேசுகிறிஸ்துவை மட்டும் நான் விசுவாசிப்பதாக உணர்ந்தேன். என்னுடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டுவிட்டது என்னும் உறுதி எனக்கு ஏற்பட்டது" என்று எழுதியுள்ளார். ஜோன் வெஸ்லியின் வாழ்வில் அன்றைய தினம் ஏற்பட்ட ஆவிக்குரிய மாற்றமே, மெதடிஸ்ட் சபை உருவாகுவதற்கும், பிற்காலத்தில் உலகின் பல நாடுகளுக்கு இச்சபை மிஷனரிகளை அனுப்பி அந்நாடுகளில் கிறிஸ்தவம் பரவுவதற்குக் காரணமாய் இருந்தது. மேலும், "மேட்சப்பிரயாணம்" என்னும் பிரபலமான நூலை எழுதிய "ஜோன் பனியன்" என்பவருடைய வாழ்வு மாற்றமடைவதற்கும் பவுல் ரோமருக்கு எழுதிய நிருபமே காரணமாய் இருந்துள்ளது. சாதாரண ஒரு தொழிலாளியாயிருந்த பனியன் சிறையிலிருக்கும் போது, ரோமர் நிருபத்தின் சத்தியங்கள் அவருடைய மனதைப் பற்றிப்பிடித்தமையினால் அவரது வாழ்க்கை மாற்றமடைந்தது. இதன் விளைவாக அவர் ஆயிரக்கணக்கான மக்களுடைய ஆவிக்குரிய வாழ்வுக்குப் பயனளித்த மோட்சப் பிரயாணம் என்னும் நூலை எழுதினார்.

கிறிஸ்தவ சபையின் சரித்திரத்தில் ஏற்பட்ட சீர்திருத்தம், மறுமலர்ச்சி, எழுப்புதல் அனைத்திற்கும், பவுல் ரோமர் நிருபத்தில் எழுதியுள்ள சத்தியமே காரணமாய் இருந்துள்ளது. உண்மையில், கிறிஸ்தவ சபையின் தலைவர்களுடைய வாழ்க்கையில் மட்டுமல்ல, கோடிக்கணக்கான சாதாரண மக்களுடைய வாழ்விலும் ரோமர் நிருபம் பெரும் செல்வாக்கு செலுத்தியுள்ளது. இதனால், இன்றும்கூட இந்நிருபத்தைக் கருத்துடன் வாசிப்பவர்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். இதை அறிந்திருந்த 4ம் நூற்றாண்டைச் சேர்ந்த சபைப்பிதாவான "ஜோன் கிறிஸ்சொஸ்தொம்" (கி.பி.350-407) என்பவர்,[16] ரோமர் நிருபத்தில் தான் செய்த பிரசங்கங்களை ஒரு கிழமைக்கு இரண்டு தடவைகள் இன்னுமொருவர் வாசிக்கக் கேட்டுக்கொண்டிருப்பதைத் தன் பழக்கமாகக் கொண்டிருந்தார். சபைச்சீர்திருத்தவாதி மாட்டின் லூத்தர், "ரோமர் நிருபம் முழுவதையும் வசனம் வசனமாக மனனம் செய்து ஒவ்வொரு நாளும் இவ்வசனங்களை நாம் தியானிக்கவேண்டும்" என்று அறிவுறுத்தி யுள்ளதோடு, "இந்நிருபத்தோடு நாம் எவ்வளவு நேரம் செலவழிக்கின்றோமோ, அந்த அளவிற்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம்" என்றும், இதுவே நமது அன்றாட ஆவிக்குரிய உணவாக இருக்கவேண்டும்" என்றும் தெரிவித்துள்ளார்.[17] உண்மையில் பிரபல வேத வியாக்கியானி "மத்தியு ஹென்றி" குறிப்பிட்டது போல, "பவுலினுடைய ஏனைய நிருபங்கள் நட்சத்திரங்களைப் போல பிரகாசிக்கையில் அவர் ரோமருக்கு எழுதிய நிருபம் மட்டும் சூரியனைப் போல வெளிச்சம் தருகின்றது." எனவே,

---

[16] இவர் ஆரம்பத்தில் "அந்தியோகிய" சபையில் பிரசங்கியாகவும், பிற்காலத்தில் "கொன்ஸ்தாந்தி நோபிள்" சபையின் பிஷப்பாகவும் பணியாற்றினார்.
[17] Cf. Preface of Luther's Commentary on Romans.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் இந்நிருபத்தைக் கிரமமான முறையில் வாசித்து, இதன் செய்தியை சரியானவிதத்தில் அறிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

## ரோம சபையின் உருவாக்கம்

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய நிருபங்களில், அவரால் ஸ்தாபிக்கப்படாத சபைக்கு எழுதப்பட்ட கடிதமாக அவர் ரோம சபைக்கு எழுதிய நிருபம் உள்ளது.[18] அதுமட்டுமல்ல, பவுல் இந்நிருபத்தை ரோம சபைக்கு எழுதினாலும், அக்காலத்தில் அவர் அச்சபையின் விசுவாசிகளை முகமுகமாயச் சந்திக்காதவராகவே இருந்தார்.[19] பவுல் கிறிஸ்தவராகியதன் பின்னர் பல தடவைகள் ரோமுக்குச் சென்று சுவிசேஷத்தை அறிவிக்க முற்பட்ட போதிலும், அதற்கு எவ்வித சந்தர்ப்பமும் அவருக்குக் கிடைக்கவில்லை (ரோ.1:10-13).[20] உண்மையில், இன்னுமொருவர் போட்ட அத்திவாரத்தின் மேல் தான் சபையைக் கட்டக்கூடாது என்னும் கொள்கையுடன் பவுல் இருந்தமையினாலேயே, ஏற்கனவே ஒரு சபை இருந்த ரோமுக்குச் செல்வதை அவர் தவிர்த்து வந்தார் (ரோ.15:21-22). இதனால், ரோம சபை எவ்வாறு உருவானது என்பதைப் பற்றி அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் எதுவும் குறிப்பிடப்பட வில்லை.

சில கிறிஸ்தவ பாரம்பரியங்கள், அப்போஸ்தலனாகிய பேதுருவினாலேயே ரோம சபை ஸ்தாபிக்கப்பட்டது என்று கூறினாலும், இவை நம்பகமற்றதும், சரித்திர ஆதாரமற்றது மான கற்பனைக் கதைகளாகவே உள்ளன.[21] ரோம சபை உண்மையிலேயே பேதுருவினால் உருவாக்கப்பட்டிருந்தால், பேதுருவைப் பற்றி பவுல் ஏதாவது எழுதியிருப்பார். பேதுருவைப் பற்றி எந்த ஒரு குறிப்பும் பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இல்லாதிருப்பதனால், அச்சபை பேதுருவினால் ஸ்தாபிக்கப்படவில்லை என்பதற்கான ஆதாரங்களில் ஒன்றாக உள்ளது.[22] உண்மையில், பேதுரு ரோமுக்குச் செல்வதற்கும் முன்பே, அவர் எருசலேமிலிருந்த காலத்திலேயே ரோமில் சபை இருந்தது.[23] "ரோமர் நிருபத்தில் பவுல் பேதுருவுக்கு வாழ்த்துச் செய்தியொன்றைக் குறிப்பிடாமல் இருப்பதும், அக்காலத்தில் பேதுரு ரோமில் இருக்கவில்லை

[18] ரோமர் நிருபத்தின் முதலாம் வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுலே இந்நிருபத்தை எழுதியவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வேத ஆராய்ச்சியாளர்கள் இந்நிருபம் பவுலினாலேயே எழுதப்பட்டது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்பதை அறியத்தந்துள்ளனர். இதனால், வேதாகமத்தின் ஏனைய புத்தகங்களைப்போல, இந்நிருபத்தை எழுதியவர் யார் என்பதை அறிந்து கொள்வதற்கோ, அல்லது, பவுலே இந்நிருபத்தை எழுதினார் என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்களைத் தேடுவதற்கோ எவ்வத அவசியமும் வேத ஆராய்ச்சியாளர்களுக்கு இதுவரையில் ஏற்பட்டதில்லை.

[19] கிறிஸ்தவராகிய பின்னர் பவுல் முதற் தடவையாக கி.பி. 60ம் ஆண்டிலேயே ரோமுக்குச் சென்றார். ஆனால் அவர் ரோமருக்கு எழுதிய நிருபம் கி.பி.56ல் எழுதப்பட்டது.

[20] பவுல் ரோமுக்குச் செல்லும் போது ரோம அரசின் கைதியாகவே கி.பி.60ல் அங்கு சென்றார்.

[21] கி.பி.180 அளவில் பேதுரு மட்டுமல்ல பவுலும் சேர்ந்தே ரோம சபையை ஸ்தாபித்தனர் என்று சபைப் பிதாக்களில் ஒருவராக இரேனியஸ் குறிப்பிட்டுள்ளார் (*Adv. Haer*.3.1.2.). பிற்கால சபைப் பாரம்பரியங்கள் பேதுருவே ரோம சபையின் ஸ்தாபகரும் முதலாவது பிஷப்புமாக இருந்ததாகக் கூறுகின்றன. ஆனால் பவுல் சபை விசுவாசிகளைத் தனிப்பட ரீதியாக அறியாதவராகவே இருந்தார் என்பதை ரேமர் நிருபத்தில் அவர் எழுதியுள்ள விடயங்கள் சுட்டிக்காட்டுகின்றன (ரோ.1:10, 1:13, 15:22). எனவே, பவுல் ரோம சபையை ஸ்தாபித்தார் என்று கூறுவது தவறகும்.

[22] D.Guthrie, *New Testament Introduction*, pp. 393-394.

[23] A.Wikenhauser, *New Testament Introduction*, p. 399.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

என்பதற்கான ஆதாரமாக உள்ளது."[24] மேலும், அப்போஸ்தலர் 15ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் கி.பி.49ல் நடைபெற்றது. அச்சமயம் பேதுரு எருசலேமில் இருந்துள்ளதை அவ்வதிகாரம் அறியத்தருகின்றது. அதற்கும் முற்பட்ட காலத்தில் பேதுரு எருசலேமுக்கு வெளியில் குறுகிய தூரமுள்ள இடங்களுக்கு மட்டுமே சென்றுள்ளார் (அப்.9:32-11:18). ஆனால் அதற்கும் முன்பே ரோமில் சபை இருந்துள்ளமையால், பேதுருவினால் ரோம சபை ஸ்தாபிக்கப்பட்டது என்று கூற முடியாது.[25]

கி.பி.49ற்கும் முற்பட்ட காலத்தில் ரோமில் கிறிஸ்தவ சபை இருந்துள்ள மைக்கு இன்னுமொரு ஆதாரம் "சோட்டோனியஸ்" என்னும் ரோம வரலாற்றாசிரியரின் புத்தகத்தில் உள்ளது. ரோமிலிருந்த யூதர்கள் மத்தியில் இயேசுகிறிஸ்துவின் பெயரால் அடிக்கடி கலவரங்கள் ஏற்பட்டு வந்தமையால், கி.பி.49ல் ரோமச் சக்கரவர்த்தியான "கிலவுதியு ராயன்" ரேமிலிருந்த யூதர்களை நகரைவிட்டு வெளியேற்றியுள்ளதாகச் சோட்டோனியஸ்சின் வரலாற்றுக் குறிப்பு அறியத்தருகின்றது.[26] இவ்வாறு கி.பி.49ல் ரோமிலிருந்து வெளியேற்றப்பட்ட யூதர்களில் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் ஏற்கனவே கிறிஸ்தவர்களாக இருந்தமையால் (அப்.18:2),[27] அதற்கும் முற்பட்ட காலத்திலேயே ரோமில் கிறிஸ்தவ சபை இருந்துள்ளது தெளிவாகின்றது.[28] எனவே, பேதுரு ரோமுக்குச் செல்வதற்கும் முன்பே ரோமில் சபை இருந்துள்ளதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாதுள்ளது. உண்மையில், "இயசேுகிறிஸ்துவின் உயிர்த் தெழுதல் நடைபெற்ற வருடத்திற்கு அடுத்த வருடத்திலேயே அவரை மேசியாவாக ஏற்றுக்கொண்ட யூதர்கள் ரோமில் இருந்தனர்."[29]

ரோம சபை போதுருவினாலேயோ, பவுலினாலேயோ இல்லையென்றால் வேறு எந்த ஒரு அப்போஸ்தலரினாலோ ஸ்தாபிக்கப்படவில்லை.[30] அப்போஸ்தலர்களினாலேயே சபைகளை ஸ்தாபிக்க முடியும், அல்லது அவர்கள் மூலமாக அற்புத அடையாளங்கள் வெளிப்பட்டால் மட்டுமே சபைகள் உருவாகும் என்னும் சிலரது உபதேசம் முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து அல்ல என்பது இதிலிருந்து

---

24 E.F.Harrison, *Introduction to the New Testament*, p. 301.

25 Oscar Cullmann, *Peter: Disciple, Apostle, Martyr*, pp. 72-157.

26 Suetonius, *Life of Claudius*, 25.2. இது பற்றி அப்போஸ்தலர் 18:2லும் குறிப்பிடப்பட்டுள்ளது.

27 அப்போஸ்தலர் 88:2ல், கொரிந்து பட்டணத்திற்குச் சென்ற பவுல் (அப்.18:1), "யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப் போகும்படி கிலவுதிராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து (இத்தாலியின் தலை நகரமே ரோம்) புதிதாய் வந்திருந்த பொந்து தேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு, அவர்களிடத் திற்குப் போனான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

28 பேதுருவினால் ஸ்தாபிக்கப்பட்ட சபைக்குப் பவுல் ரோமர் 1:8-15ல் குறிப்பிட்டுள்ள விதமான ஒரு விஜயத்திற்கு திட்டமிட்டிருந்தார் என்று கூறமுடியாது (D.A.Carson, D.J.Moo, & L.Morris, *An Introduction to the New Testament*, p. 242).

29 F.J.Foakes-Jackson, *Peter: Prince of Apostles*, p. 195.

30 கி.பி.4ம் நூற்றாண்டைச் சேர்ந்த சபைக் குறிப்புகள், பேதுருவும் பவுலும் ரோமில் மரணமடைந் துள்ளதைப் பற்றி அறியத்தருகின்ற போதிலும் (Clement of Rome *Ad Cor.* v.4), அவர்கள் ரோமில் சபையை ஸ்தாபித்ததைப் பற்றி இக்குறிப்புகள் எதுவும் கூறவில்லை (D.Guthrie, *New Testament Introduction*, p. 394).


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

தெளிவாகின்றது.[31] உண்மையில், ரோம சபை சாதாரண விசுவாசிகளினால் உருவாக்கப்பட்ட ஒரு சபையாகும். பெந்தெகொஸ்தே தினத்தன்று ரோமிலிருந்து எருசலேமுக்கு வந்திருந்த யூதர்களில் சிலர் இயேசுகிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டனர் (அப்.2:10). இவர்கள் மறுபடியுமாகத் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் சென்ற பின்னர் அங்குள்ள மற்ற யூதர்களுக்கும் இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிவித்து வந்தமையால் ரோமில் ஒரு கிறிஸ்தவ சபை உருவாகியது.[32] இதிலிருந்து சாதாரண விசுவாசிகளினாலும் சபைகளை உருவாக்க முடியும் என்பது தெளிவாகின்றது. அப்போஸ்தலர்களும் ஏனைய ஊழியக்காரர்களும் மட்டுமல்ல கிறிஸ்தவர்கள் அனைவருமே இயேசுகிறிஸ்துவிற்குச் சாட்சியாக இருந்து, மற்றவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவித்து சபைகளை உருவாக்க கடமைப்பட்டுள் ளார்கள். முதலாம் நூற்றாண்டில் எருசலேமில் இருந்த சபைக்கு உபத்திரவங்கள் ஏற்பட்டு சபை விசுவாசிகள் சிதறிப்போன காலத்திலும் அவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷத்தை அறிவித்ததை அப்போஸ்தலர் 8:1-4 அறியத்தருகின்றது. இதன் மூலம் உருவான சபைகளில் ஒன்றே அந்தியோகியாவிலிருந்த சபையாகும். உபத்திரவம் காரணமாக சிதறிப்போன விசுவாசிகளினாலேயே சுவிஷேத்தை அறிவிக்க முடியுமென்றால் சௌகரியமாக வாழும் நாம் அதைவிட அதிகமாக அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம் என்பதை மறுப்பதற்கில்லை.[33]

## ரோம சபையின் விசுவாசிகள்

பெந்தெகொஸ்தே நாளில் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட யூதர்களின் சுவிசேஷப் பணியினால் ரோமில் உருவான சபையில் ஆரம்பத்தில் யூதர்களே அதிகமாக

---

[31] E.F.Harrison, *Introduction to the New Testament*, p. 302. கி.பி.4ம் நூற்றாண்டைச் சேர்ந்த "அம்புரோசியஸ்டர்" என்னும் சபைப் பிதா, ரோம சபையானது எந்த ஒரு அப்போஸ்தலனையும், அற்புதங்களையும் காணாத நிலையில் உருவானது" என்று குறிப்பிட்டுள்ளார் (Ambrosiaster, *Patrologia Latina*, col.46).

[32] பெந்தெகொஸ்தே நாளில் இரட்சிக்கப்பட்ட யூதர்கள் சபையை ஸ்தாபிக்கக்கூடிய அளவுக்கு வேதாகம அறிவும் கிறிஸ்தவ அனுபவமும் அற்றவர்கள் என்னும் சிலரது தர்க்கம் (W.Sanday & A.C.Headlam, *Romans: International Critical Commentary*, p. xxviii) ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றல்ல. யூத கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களை நன்கறிந்திருந்தமையால் அவர்களை வேத அறிவு குறைந்தவர்கள் என்று கூறமுடியாது (D.Guthrie, *New Testament Introduction*, p. 394). மேலும், அப்போஸ்தலர்கள் இல்லாத நிலையில் ஒரு சபை உருவாக முடியாது என்னும் இவர்களது தர்க்கமும் உண்மைக்கும் புறம்பானது (B.Wiss, *Manual Introduction to the New Testament*, p. 295). எருசலேம் சபைக்கு உபத்திரவம் ஏற்பட்ட காலத்தில் அப்போஸ்தலர்கள் எருசலேமில் இருக்கும் போது, சிதறிப்போன விசுவாசிகள் சுவிசேஷத்தை அறிவித்து சபையை உருவாக்கியுள்ளனர் (அப்.8:1-4). அப்போஸ்தலர் 8:4ல், "எங்குந்திரிந்து" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்பிரயோகம் (மூலமொழியில்) நடபடிகள் புத்தகத்தில் "சுவிசேஷப் பணிபிரயாணத்திற்கு உபயோகிக்கப்பட்டுள்ள சிறப்பானதொரு பதமாகும்." அதேபோல, இவ்வசனத்தில் "சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்" என்பதும் சுவிசேஷப் பணியில் ஈடுபடும் மிஷனரிகளின் பணியைக் குறிப்பிட லூக்கா உபயோகித்துள்ள சொற்பிரயோகமாகும்" (.J.Williams, *Acts: New International Biblical Commentary*, p. 154). எனவே, சிதறிப்போன விசுவாசிகளும் அப்போஸ்தலர்களைப் போலவே சுவிசேஷப்பணியில் ஈடுபட்டுள்ளனர் என்பதை மறுக்கமுடியாதுள்ளது.

[33] "அந்தியோகிய சபையிலிருந்த விசுவாசிகளினாலேயே ரோம சபை உருவானது" (E.F.Harrison, *Introduction to the New Testament*, p. 300) என்னும் சிலரது கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. பெந்தெகொஸ்தே நாளில் ரோமிலிருந்து யூதர்கள் எருசலேமுக்கு வந்திருந்ததைப் பற்றி அறியத்தரும் அப்போஸ்தலருடைய நடபடிகள் அந்தியோகியாவிலிருந்து விசுவாசிகள் ரோமுக்குச் சென்றதைப் பற்றி எதுவும் கூறவில்லை. மேலும், எருசலேமிலிருந்து அந்தியோகியாவிற்கு விசுவாசிகளினால் சுவிசேஷம் சென்றதைப் பற்றி குறிப்பிடும் லூக்கா (அப்.11:19-20). அந்தியோகிய சபையிலிருந்து பவுலும் பானபாவும் பிற்காலத்தில் மிஷனரிகளாக சுவிசேஷப்பணிக்காக வேறு நாடுகளுக்குச் சென்றதைப் பற்றி அறியத்தந்தாலும் (அப்.13) இச்சபையின் விசுவாசிகள் சுவிசேஷப் பணியில் ஈடுபட்டது பற்றி எதுவும் கூறவில்லை.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

இருந்தனர்.[34] ஆனால், கி.பி.49ல் யூதர்கள் ரோமிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் புறஜாதியாரின் எண்ணிக்கை சபையில் அதிகரித்தது. கி.பி.49ல் உருவான யூதர்களை வெளியேற்றும் சட்டம் சில வருடங்களின் பின்னர் தளர்த்தப்பட்டமையால் மறுபடியும் யூதர்கள் ரோமில் குடியேறத் தொடங்கினர்.[35] இதனால், பவுல் ரோமருக்கு நிருபம் எழுதிய காலத்தில் ரோம சபை யூதர்-புறஜாதியார் இருவரையும் உள்ளடக்கிய சபையாக இருந்தது. அக்காலத்தில் யூதர்களே ரோம சபையில் பெரும்பான்மையினராக இருந்ததாகச் சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகையில், ஏனையவர்கள் சபையில் புறஜாதியினரே அதிகளவில் இருந்ததாகக் கூறுகின்றனர்.

ரோம சபையில் யூதர்களே அதிகளவில் இருந்தனர் என்று தர்க்கிப்பவர்கள், ரோமர் 8முதல் 11வரையிலான அதிகாரங்களிலேயே இந்நிருபத்தின் முக்கியமான விடயங்கள் இருப்பதகவும், இவ்வதிகாரங்கள் யூதர்களைப் பற்றியவை என்பதனால் நிருபத்தின் பிரதான விடயம் யூதர்களுக்கே எழுதப்பட்டுள்ளது என்றும், இதனால் ரோம சபையில் யூதக் கிறிஸ்தவர்களே அதிகமாக இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.[36] மேலும், ரோமர் நிருபத்தில் எழுதப்பட்டுள்ள விடயங்கள், அதாவது ஆபிரகாம் ரோம கிறிஸ்தவர்களின் தகப்பனாகக் குறிப்பிடப்பட்டுள்ளதும் (ரோ.4:1), அதிகளவு பழைய ஏற்பாட்டு வசனங்கள் உபயோகிக்கப்பட்டிருப்பதும் இதற்கான சில ஆதாரங்களாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.[37] இவற்றைத் தவிர, நிருபத்தில் யூதக்கிறிஸ்தவர்களுக்குத் தனிப்பட்ட ரீதியான வாழ்த்துதல் சொல்லப்பட்டிருப்பதும் (ரோ.16:3,16:7,16:11), சில வசனங்கள் தனிப்பட்டரீதியாக யூதருடன் பேசுவது போல எழுதப்பட்டிருப்பதும் (ரோ.2:17),[38] நிருபத்தின் வாசகர்கள் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தோடு தொடர்புடையவர்களாகச் சித்தரிக்கப்பட்டிருப்பதும் (ரோ.6:14-15,7:1,7:4),[39] நிருபத்தின் பெரும்பாலான பகுதியில் யூதக்கிறிஸ்தவர்களோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் எழுதப் பட்டிருப்பதும் (ரோ.2:1-3:8, 3:19-20, 3:27-31, 4:12-15, 5:13-14, 5:20, 6:14, 7:1-8:4, 9:30-10:8) ரோம சபையில் யூதக்கிறிஸ்தவர்களே அதிகமாக இருந்தார்கள் என்பதற்கான

---

[34] கி.மு.63ல் பொம்பி என்பவன் யூதேயாவைக் கைப்பற்றி பலரை ரோமுக்குக் கைதிகளாகக் கொண்டுபோனான். பிற்காலத்தில் இவர்கள் விடுவிக்கப்பட்டு ரோமில் குடியேற்றப்பட்டனர். இதனால், கி.மு.59ல் கனிசமான அளவு மக்களைக் கொண்ட யூதக் குடியிருப்பு ரோமில் இருந்தது. கி.பி.19ம் ஆண்டில் தைபீரியஸ் என்னும் ரோம சக்கரவாத்தி யூதர்களை ரோமிலிருந்து வெளியேற்றினாலும் சிலவருடங்களின் பின்னர் மறுபடியுமாக யூதர்களின் எண்ணிக்கை ரோமில் அதிகரித்தது. கி.பி.49ல் இரண்டாவது தடவையாக யூதர்கள் ரோமிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்பும் சில வருடங்களின் பின்னர் மறுபடியும் யூதர்கள் ரோமில் குடியேறினர். இதனால் முதலாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ரோம் நகரக் குடித்தொகையில் யூதர்களின் பங்கு கனிசமான அளவு இருந்தது. (H.J.Leon, *The Jews of Ancient Rome*, pp. 4-9; W.Wield, "The Jewish Community in Ancient Rome and the Origins of Roman Christianity" in *The Romans Debate*. pp. 101-108).

[35] கி.பி.49ல் ரோமை விட்டுச் சென்ற ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாலும் சில வருடங்களின் பின்னர் மறுபடியுமாக ரோமில் இருப்பதை ரோமர் 16:3 அறியத்தருகின்றது.

[36] Renan, *Saint Paul*, p. 254.

[37] William Manson, *New Testament Essays*, pp. 150-151; W.Manson, *The Epistle to the Hebrews*, pp. 172-184.

[38] ரோமர் 2:17-18ல் "நீ யூதனென்று பெயர்பெற்று, நியாயப்பிரமாணத்தின்மேல் பற்றுதலாயிருந்து, தேவனைக் குறித்து மேன்மை பாராட்டி, நியாயப்பிரமாணத்தினால் உபதேசிக்கப்பட்டவனாய் அவருடைய சித்தத்தை அறிந்து நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கிறாயே" என்று பவுல் தன் வாசகர்களிடம் கேட்டுள்ளார்.

[39] ரோமர்7:1ல் "நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன்" என்று எழுதும் பவுல், 6:14-15ல், தன் வாசகர்கள் தற்போது "நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவர்கள் அல்ல" என்றும், அவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்கள்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன.[40] இத்தகைய விடயங்களைச் சுட்டிக்காடுகிறவர்கள், ரேமசபையில் ஒரு சில புறஜாதிக் கிறிஸ்தவர்களே இருந்தனர் என்று கருதுகின்றனர்.[41]

ரேமர் நிருபத்தில் உள்ள யூதக்கிறிஸ்தவர்களைப் பற்றிய குறிப்புகளை, அவர்கள் சபையில் பெரும்பான்மையினராக இருந்தமைக்கான ஆதாரங்களாக ஏற்றுக்கொள்ளாத வேத ஆராய்ச்சியாளர்கள், சபையில் யூதர்கள் சிறுபான்மையினராகவே இருந்தனர் என்று தர்க்கிப்பதோடு,[42] சபையில் புறஜாதியினர் அதிகமாக இருந்ததற்கே அதிக ஆதரங்கள் உள்ளதாகக் கூறுகின்றனர். இவர்கள், ரோமர் 1:5-6, 11:13-24 15:14-21 போன்ற வசனங்களில் பவுல் நேரடியாகப் புறஜாதிக்கிறிஸ்தவர்களோடு பேசுவதைச் சுட்டிக்காட்டுகின்றனர்.[43] மேலும், சிறுபான்மையினரான யூதர்களையே பவுல் “பலவீனமான சகோதரர்” (14:1-15:13) என்னும் அடைமொழியுடன் அழைப்பதாகவும்,[44] “நீங்கள் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்” (ரோ.15:7) என்னும் கட்டளை புறஜாதியாருக்கே பொருத்தமானது என்றும் கூறுகின்றனர்.[45] மேலும், நிருபத்தின் ஆரம்பத்தில் பவுல் தன் வாசகர்களைப் புறஜாதியாராகவே குறிப்பிட்டுள்ளதோடு, யூதர்களை “நமது சகோதரர்” என்று வாசகர்களையும் தன்னோடு சேர்த்துக் குறிப்பிடாமல் “தனது” என்று தன்னை மட்டுமே யூதர்களின் சகோதரராகக் குறிப்பிட்டுள்ளதும் சபையில் புறஜாதிக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையே அதிகமாக இருந்தது என்பதற்கான ஆதாரங்களில் ஒன்றாக உள்ளதாகவும் கூறுகின்றனர்.[46]

பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் உரிய விடயங்கள் உள்ள போதிலும், இவற்றின் அளவை அடிப்படையாகக் கொண்டு, சபையில் எவ்வினத்தினர் அதிகமாக இருந்தனர் என்பதை முடிவு செய்வது சரியான ஒரு முறையாக இல்லை.[47] யூதரையும் புறஜாதிஜயாரையும் பற்றிய விடயங்கள் ரோமர் நிருபத்தில் இருப்பது, ரோம சபையில் இரு இனத்தவரும் அங்கத்தினர்களாக இருந்துள்ளதையே சுட்டிக்காட்டுகிறது. அக்கால சரித்திர, மற்றும் கிடைக்கக்கூடிய தகவல்கள் அனைத்தையும் கருத்திற்கொண்டு பாக்கும்போது ரோம சபையில் புறஜாதியாரின் எண்ணிக்கையே அதிகமாக இருந்துள்ளதை மறுக்கமுடியாதுள்ளது.[48] ரோமர் நிருபத்தில் பழைய ஏற்பாட்டையும் நியாயப்பிரமாணத்தையும் பற்றிய குறிப்புகள் அதிகமாக இருக்கின்றது என்பதற்காக இது யூதகிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டுள்ளது என்று கூறமுடியாது. கலாத்தியருக்கு பவுல் எழுதிய நிருபத்திலும், நியாயப்பிரமாணத்

---

[40] D.A.Carson, D.J.Moo, & L.Morris, *An Introduction to the New Testament*, p. 243.
[41] Theodore Zahn, *Introduction to the New Testament Volume 11*, p. 422.Grand Rapids: Kregel Publications, 1953.
[42] W.Wield, “The Jewish Community…” pp. 109-113.
[43] D.A.Carson, D.J.Moo, & L.Morris, *An Introduction to the New Testament*, pp. 243-244.
[44] *Ibid*. p. 245.
[45] *Ibid*. p. 244.
[46] E.F.Harrison, *Introduction to the New Testament*, p. 301.
[47] சில வேத ஆராய்ச்சியாளர்கள், ரோமர் நிருபத்தில் ஐந்து பகுதிகள் இருப்பதாகவும், இவை தனிப்பட்ட ஐந்து குழுவினருக்கு எழுதப்பட்டுள்ளதாகவும் கருதுகின்றனர் (P.Minear, *The Obedience of Faith: The Purpose of Paul in the Epistles of Romans*). ஆனால், இத்தகைய பிரிவுகள் ரோமர் நிருபத்தில் இருப்பதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை.
[48] J.Munck, *Paul and the Salvation of Mankind*, pp. 200-209.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

தைப் பற்றிய பல விடயங்கள் உள்ளன. ஆனால், அந்நிருபம் புறஜாதிக்கிறிஸ்தவர் களுக்கு எழுதப்பட்டுள்ளதை எவரும் மறுப்பதில்லை. புறஜாதிக்கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டையும் நியாயப்பிரமாணத்தையும் அறியாதவர்கள் என்றும் கூறமுடியாது. எனவே, நியாயப்பிரமாணத்தைப் பற்றிய விடயங்கள் யூதகிறிஸ்தவர்களுக்கு மட்டுமே எழுதப்பட்டுள்ளன என்று கூறுவதற்கில்லை. மேலும், "ரோமிலிருந்த புறஜாதிக் கிறிஸ்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஆரம்பத்தில் யூதஜெபாலயத்தோடு தொடர்பு கொண்டிருந்தவர்களாவர்."[49] இதனால் இவர்கள் பழைய ஏற்பாட்டையும் நியாயப் பிரமாணத்தையும் பற்றி அறியாதவர்களாகவும், பவுல் இது பற்றி எழுதும் விடயங்களுக்கு எவ்வித தொடர்பும் அற்றவர்களாகவும் இருந்தார்கள் என்றும் கூறமுடியாது. உண்மையில், "யூதர்கள் மட்டுமல்ல புறஜாதியாரும் பழைய ஏற்பாடு நியாயப்பிரமாணம் எவ்வாறு இயேசுகிறிஸ்துவில் நிறைவேறியது என்பதையும், பழைய ஏற்பாட்டுக்கும், தேவன் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்களுக்கு அளித்த வாக்குத்தத்தங்கள் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டியவர்களாய் இருந்தனர். இதனாலேயே பவுல் நியாயப்பிரமாணத்தைப் பற்றி அதிகமாக இந்நிருபத்தில் எழுதியுள்ளார்."[50] மேலும், ஆபிரகாமை ரோம சபைக்கிறிஸ்தவர்களின் தகப்பனாகப் பவுல் குறிப்பிட்டுள்ளமையால் அவர்கள் யூதர்கள் என்னும் கருத்தும் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. ஏனென்றால், "புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட கொரிந்தியர் நிருபத்தில் பவுல் பழைய ஏற்பாட்டு மக்களை அவர்களுடைய பிதாக்களாகவே கருதியுள்ளார் (1கொரி.10:1)."[51] உண்மையில், ரோம சபையில் யூதர் புறஜாதியார் என்னும் இரு இனத்தவரும் அங்கத்தினர்களாக இருந்தமையினாலேயே சில பகுதிகளில் பவுல் இவர்களோடு நேரடியாகப் பேசுவது போல எழுதியுள்ளார். எனினும், இவர்களில் புறஜாதிக் கிறிஸ்தவர்களே அதிகளவில் இருந்தனர் என்பதை மறுப்பதற்கில்லை.[52]

## ரோமர் நிருபத்தின் காலம்

ரேமர் நிருபம் எக்காலத்தில் எழுதப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்வதற்கு நிருபத்திலேயே சில குறிப்புகள் உள்ளன.[53] பவுல் இந்நிருபத்தை எழுதும் காலம் வரை ரோமுக்குச் செல்லாதவராகவே இருந்தார் என்பதை ரோமர் 1:8-15, 15:23-24 அறியத்தருகின்றது. மேலும், பவுல் இக்கடிதத்தை எழுதும் காலத்தில் மக்கெதோனியா அகாயா என்னும் பிரதேசங்களில் எருசலேம் சபைக்காகத் தான் சேகரித்த காணிக்கையுடன் (அப்.19:21, 20:1-3) எருசலேமுக்குப் போக ஆயத்தமாயிருந்தார் என்று ரோமர் 15:24-31ல் குறிப்பிட்டுள்ளார். இது பவுல் ரோமர் நிருபத்தை எழுதும் காலத்தில்

---

[49] D.J.Moo, *Romans: Wycliffe Exegetical Commentary Volume 1*, pp. 10-13, 44-46.
[50] D.A.Carson, D.J.Moo, & L.Morris, *An Introduction to the New Testament*, p. 244.
[51] D.Guthrie, *New Testament Introduction*, p. 395.
[52] W.Sanday & A.C.Headlam, *Romans: International Critical Commentary*, p. xxxiii.
[53] அனால், ரோமர் 15ம் 16ம் அதிகாரங்கள் பவுலின் ஆரம்ப நிருபத்தில் இருக்கவில்லை என்று கூறும் வேத ஆராய்ச்சியாளர்களினுடைய கருத்துக்களை நாம் ஏற்றுக்கொண்டால் (இது பற்றி ல் விளக்கப்பட்டுள்ளது) இந்நிருபம் எழுதப்பட்ட காலத்தை இந்நிருபத்தில் எழுதப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அறிந்து கொள்ள முடியாது.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

அவர் எடுத்த தீர்மானமாயிருப்பதை ரோமர் 15:25 அறியத்தருகின்றது.[54] எனவே, இதிலிருந்து, பவுல் தனது மூன்றாவது சுவிசேஷப் பணிப்பிரயாணத்தின் முடிவில் ரோமர் நிருபத்தை எழுதியுள்ளார் என்பதை அறிந்து கொள்ளுகின்றோம்.

ரோமர் 16:1-2ல் பவுல் கெங்கிரேயா ஊர் சபையின் ஊழியக்காரியாகிய பெபேயாளை ஏற்றுக்கொள்ளும்படி அறிவுறுத்துவதிலிருந்து, இவளே பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தை ரோமுக்கு எடுத்துச் சென்றிருக்க வேண்டும் என்று வேத ஆராய்ச்சி யாளர்களய் கருதுகின்றனர்.[55] கெங்கிரேயா கொரிந்து பட்டணத்தின் கிழக்குக்கரை துறைமுகமாய் இருந்தமையால், பவுல் கொரிந்து பட்டணத்தில் இருக்கும் போதே இந்நிருபத்தை எழுதியிருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளுகின்றோம். மேலும் பவுல் கொரிந்து பட்டணத்தைச் சேர்ந்த எரஸ்து (2தீமோ.4:20)[56] மற்றும் காயு (1கொரி.1:14)[57] என்போருடைய வாழ்த்துதல்களையும் ரோம சபையாருக்குத் தெரிவிப்பதும் (ரோ.16:23) இதை உறுதிப்படுத்துகிறது. எனவே ரேமர் நிருபம் கி.பி.56 அளவில் பவுல் கொரிந்து பட்டணத்தில் இருக்கும் போது எழுதப்பட்டுள்ளது.[58]

## ரோமர் நிருபத்தின் மூலப்பிரதிகள்

ரோமர் நிருபத்தைப் பற்றி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் இருக்கும் சர்ச்சை இன்றிருக்கம் மூலப்பிரதிகளின் வேறுபாடுகளோடு சம்பந்தப்பட்டது.[59] இன்றிருக்கும் கைகளினால் பிரதி பண்ணப்பட்ட ரோமர் நிருபத்தின் மூலப்பிரதிகளில் இருக்கும் சில வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டும் வேத ஆராய்ச்சியாளர்கள், வேதாகமத்தில் உள்ள ரோமர் நிருபம் தனிப்பட்ட ஒரு நிருபம் அல்ல என்றும், இரு நிருபங்கள் ஒன்று சேர்க்கப்பட்ட நிலையிலேயே வேதாகமத்தில் ரோமர் நிருபம் இருக்கின்றது என்றும்

---

54 ரோமர் 15:25ல் “இப்பொழுதோ பரிசுத்தவான்களுக்கு உதவிசெய்யுங்காரியமாக நான் எருசலேமுக்குப் பிரயாணம் பண்ண எத்தனமாயிருக்கிறேன்” என்று பவுல் குறிப்பிட்டுள்ளார்.

55 C.Vaughan & B.Corley, *Romans: Bible Study Commentary*, p. 13.

56 ரோமர் 16:23ல் எரஸ்து “பட்டணத்து உக்கிராணக்காரன்” என்று பவுல் கூறுகின்றார். சமீப காலத்தில் கொரிந்து பட்டணத்தில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களினால் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டொன்றில் எரஸ்து என்பவன் கொரிந்து பட்டண அதிகாரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து பவுல் குறிப்பிடும் காயு என்பவனே கொரிந்து பட்டணத்தில் அக்கதாலத்தில் இருந்த அதிகாரி என்பதை அறிந்து கொள்ளுகின்றோம் (D.W.J.Gill. “Erastus the Acdile” in *Tyndale Bulletin*. pp. 293-302).

57 ரோமர் 16:23ன்படி பவுல் கொரிந்துவில் இருந்தபோது காயு என்பவனே அவரைப் பராமரித்து வந்தான். 1கொரிந்தியர் 1:14ல் தான் கொரிந்துவில் இருந்தபோது காயுவின் வீட்டாருக்குத் தான் ஞானஸ்நானம் கொடுத்ததாகப் பவுல் குறிப்பிட்டுள்ளார்.

58 ரோமர் நிருபம் கி.பி.56ல் அல்லது 57ல் எழுதப்பட்டது என்பதைப் பெரும்பாலான வேத ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ள போதிலும், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் சரித்திர ரீதியான தன்மையை மறுதலிக்கும் சிலர் ரோமர் நிருபம் கி.பி.47ல் எழுதப்பட்டது என்றும் (Charles Buck & Greer Taylor, *Saint Paul: A Study of the Development of His Thought*, pp. 170-171). வேறு சிலர் 51/52 ல் அல்லது 54/55 ல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகின்றனர் (Gerd Ludemann, *Paul, Apostle to the Gentiles: Studies in Chronology*, pp. 263). 1கொரிந்தியர் நிருபத்திற்கும் முன்பே (இது கி.பி.54ல் எழுதப்பட்டது) ரோமர் நிரும் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்னும் ஊகத்தின் அடிப்படையில் சில வேத ஆராய்ச்சியாளர்கள் இது 52ற்கும் 54ற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர் (J.R.Richards, “Romans and 1Corinthians: Their Chronological Relationship and Comparative Dates” in *New Testament Studies*. pp. 14-30). ஆனால் இத்தகைய கருத்துக்கள் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தக விடயங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் பவுலின் சரிதையின் காலக்கிரம ஒழுங்கு முறையை முரண்படுத்தும் விளக்கங்களாகவே உள்ளன.

59 கி.பி. 1456ல் அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு, வேதாகமம் அச்சிடப்பட்ட புத்தகமாகும் வரை ஒரு பிரதியைப் பார்த்து எழுதுவதன் மூலமாகவே வேதாகமத்தின் பிரதிகள் தயாரிக்கப்பட்டன. இத்தகைய கையெழுத்துப் பிரதிகளே வேதாகமத்தின் மூலப்பிரதிகள் என்று அழைக்கப்படுகின்றன.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

கூறுவதோடு,[60] பிற்காலத்தில் இடைக்கிடையே இந்நிருபத்தின் பல இடங்களில் புதிய வசனங்கள் புகுத்தப்பட்டுள்ளன[61] என்றும் கருதுகின்றனர். ஆனால், இத்தகைய விளக்கங்கள் ரோமர் நிருபத்தில் பாவியான மனிதன் தேவனோடு எவ்வாறு ஒப்புரவாக்கப்படுகின்றான் என்னும் கிறிஸ்தவ உபதேசம் கிரமமான முறையில் எழுதப்பட்டுள்ளது என்னும் சத்தியத்தை மறுதலிப்பதற்காக எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாக உள்ளதே தவிர உண்மை அல்ல.[62]

ரோமர் நிருபத்தின் அதிகாரங்கள் முரண்பாடுடையவை என்னும் கருத்து உண்மைக்குப் புறம்பானது என்றாலும், தற்போது இருக்கும் இந்நிருபத்தின் மூலப்பிரதிகளில் சில 14ம் அதிகாரத்தோடு முற்றுப் பெறுகையில் வேறு சில பிரதிகள் 15ம் அதிகாரத்தோடு முடிவடைகின்றன.[63] இதனால் நமது வேதாகமத்தில் காணப்படும் ஆசீர்வாத உரை (அதாவது 16ம் அதிகாரத்தின் 25 முதல் 27 வரையிலான வசனங்கள்) இப்பிரதிகளில் 14ம் அல்லது 15ம் அதிகாரத்தின் இறுதியில் உள்ளது.[64] இதனால், பவுல் ஆரம்பத்தில் 1 முதல் 14 வரையிலான அதிகாரங்களை மட்டுமே ரோம சபைக்கு எழுதினார் என்றும், அவர் ரோம சபைக்கு எழுதிய இரண்டாவது நிருபமே 15ம் 16ம் அதிகாரங்களில் உள்ளது என்று சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[65] ஆனால், 14ம் அதிகாரத்தின் தொடர்ச்சியாகவே 15ம் அதிகாரத்தின் ஆரம்ப வசனங்கள் இருப்பதனால் பவுல் ரோமருக்கு இரு நிருபங்களை எழுதினார் என்னும் இவ்விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.[66] எனவே, பெரும்பாலான மூலப்பிரதிகளில் ரோமர் நிருபத்தின் கடைசி இரண்டு அதிகாரங்களும் இல்லாதிருப்பதற்கான காரணம் யாதென்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். "தான் ரோமருக்கு எழுதிய நிருபம் சகல பிரதேசங்களிலும் உள்ளவர்களுக்குச் சென்றடைவற்காகப் பவுலே தான் ஆரம்பத்தில் எழுதிய நிருபத்தின் கடைசி இரண்டு அதிகாரங்களையும் நீக்கினார்"[67] என்று சில வேதா

---

[60] J.Kinoshita, "Romans – Two Eritings Combined" in *Novum Testamentum*. pp. 258-277.

[61] Cf. J.C.O'Neill, *Romans: Penguin New Testament Commentaries*. ரோமர் 13:1-7 பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது என்பது சிலரது கருத்தாக உள்ளது (J.Kallas, NTS 11 (1965), pp. 365-374). சிலர் ரோமர் 3:25-26 (C.H.Talbert, JBL lxxxv (1966), pp. 287-296).

[62] N.M.Watson, "Simplifying the Righteousness of God: A Critique of J.C.O'Neill's Romans" in *Scottish Journal of Theology*. pp. 464-469.

[63] பெரும்பாலான மூலப்பிரதிகளிலும், "வல்கேட்" என்று அழைக்கப்படும் வேதாகமத்தின் லத்தீன் மொழிபெயர்ப்பிலும் ரோமர் 15:1-16:24 முழுமையாக இல்லை. மேலும், ஆரம்பகால சபைப் பிதாக்கள் 15ம் 16ம் அதிகாரங்களைப் பற்றி எதுவும் எழுதாமல் இருப்பதும் அக்காலத்தில் இவ்விரு அதிகாரங் களும் ரோமர் நிருபத்தில் இருக்கவில்லை என்பதற்கான ஆதாரமாக உள்ளது. (D.A.Carson, D.J.Moo, & L.Morris, *An Introduction to the New Testament*, p. 244).

[64] சிறந்த மூலப்பிரதிகளான அலெக்சாந்திரிய வேதப் பிரதியிலும் மேலைத்தேய வேதப் பிரதியிலும் ஆசீர்வாத உரை 16ம் அதிகாரத்தின் இருதியில் உள்ளது. ஆனால், பெரும்பாலான அதிக முக்கியத்துவம் பெறாத வேதப்பிரதிகளில் இவ்வாசீர்வாத உரை 14ம் அதிகாரத்தின் இறுதியிலும், "ச்செஸ்டர் பீட்டி" என்று அழைக்கப்படும் வேதப்பிரதியில் 15ம் அதிகாரத்தின் இறுதியிலும் உள்ளது. சில பிற்கால வேத பிரதிகளில் 14ம் 16ம் அதிகாரங்கள் இரண்டிலும் இவ்வாசீர்வாத உரை உள்ளது. ஒருசில பிரதிகளில் ஆசீர்வாத உரை முழுமையாக நீக்கப்பட்டுள்ளது (D.Guthrie, *New Testament Introduction*, p. 405).

[65] K.Lake, *The Earlier Epistles of St. Paul*, pp. 350-366.

[66] W.Sanday & A.C.Headlam, *Romans: International Critical Commentary*, p. xci; H.Gamble, *The Textual History of the Letter to the Romans*, p. 84.

[67] J.B.Lightfoot, "The Structure and Destination of the Epistle to the Romans" in *Biblical Essays*, pp. 287-320, 352-374; J.Denney, *Romans: The Expositor's Greek Testament Volume 2*, pp. 576-582.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அதேபோல, இத்தகைய நோக்கத்துடன் பிற்கால சபையால் ரோமர் நிருபத்தின் கடைசி இரு அதிகாரங்களும் நீக்கப்பட்டிருக்கலாம் என்பது சிலரது தர்க்கமாக உள்ளது.[68] ஆனால், முதற் தடவையாக கி.பி.2ம் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டுப் பத்தகங்களைத் தொகுத்து வெளியிட்ட “மார்ஷியோன்” என்பவரே ரோமர் நிருபத்தின் கடைசி இரு அதிகாரங்களையும் நீக்கியுள்ளார் என்பதை வேத ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.[69] பவுலினுடைய நிருபங்களையும் லூக்காவின் சுவிசேஷத்தையும் மட்டுமே வேதவாக்கியமாக ஏற்றுக்கொண்டிருந்த மார்ஷியோன் பவுலின் நிருபங்களில் தனது உபதேசத்திற்கு முரணான பகுதிகளைப் புதிய ஏற்பாட்டிலிருந்து நீக்கியிருந்தார். இதனால் ஆரம்ப கால வேதப் பிரதிகளில் ரோமர் நிருபத்தின் கடைசி இரு அதிகாரங்களும் இல்லாமலிருப்பதற்கு மார்ஷியோனுடைய செயலே காரணமாய் இருந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.[70]

அண்மைக் காலத்தில் சில வேத ஆராய்ய்சியாளர்கள் ரோமர் நிருபத்திலுள்ள 16ம் அதிகாரம் ஆரம்பத்தில் ரோமர் நிருபத்தில் இருக்கவில்லை என்று கூறத் தொடங்கியுள்ளனர். இவ்வவதிகாரத்தில் பவுல் பலருக்குத் தனது வாழ்த்துதலைத் தெரிவிப்பதனால், அதாவது பெயர் குறிப்பிட்டு 25 தனிப்பட்ட நபர்களுக்கும், இரண்டு குடும்பங்களுக்கும் ஒரு வீட்டுச் சபைக்கும், பெயர் குறிப்பிடாத பல சகோதரருக்கும் இந்நிருபத்தில் வாழ்த்துச் செய்தி இருப்பதனால், பவுல் தான் விஜயம் செய்திராத சபையில் அவருக்கு அறிமுகமான இத்தனை பேர்கள் இருந்திருக்க முடியாது என்று கூறும் வேத ஆராய்ச்சியாளர்கள், இவ்வதிகாரம் ஆரம்பத்தில் தனிப்பட்ட ஒரு கடிதமாகவே இருந்திருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். இவர்களில் சிலர் இது 16ம் அதிகாரம் முதலாம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெபேயாள் என்னும் பெண்ணை அறிமுகப்படுத்துவதற்காக எழுதப்பட்ட கடிதம் என்று கூறுகின்றனர்.[71] ஆனால், 16ம் அதிகாரம் ஒரு புதிய கடிதம் போல ஆரம்பமாகாதிருப்பதனால், ஆரம்பமும் முடிவும் இல்லாத நிலையில் இத்தகைய ஒரு கடிதம் இருந்தது என்று கூறமுடியாது.[72] இதனால் சிலர், ரோமர் நிருபத்தைப் பவுல் எபேசு சபைக்கு அனுப்பியபோது மேலதிகமாகச் சேர்த்து அனுப்பிய பகுதியே 16ம் அதிகாரம் என்றும் கூறிவருகின்றனர்.[73] புதிய

---

68 H.Gamble, *The Textual History of the Letter to the Romans*, pp. 115-124.

69 D.Guthrie, *New Testament Introduction*, pp. 406, 409-410.

70 பழைய ஏற்பாட்டையும் ஏற்றுக்கொள்ளாத மார்ஷியோன் ரோமர் 15:3, 15:9-12 போன்ற வசனங்களில் பவுல் உபயோகிக்கும் பழைய ஏற்பாட்டு வசனங்களின் கருத்தை ஏற்றுக்கொள்ளாதவராக 15ம் 16ம் அதிகாரங்களை நீக்கியிருக்கவேண்டும் (D.A.Carson, D.J.Moo, & L.Morris, *An Introduction to the New Testament*, p. 246).

71 E.J.Goodspeed, “Phoebe’s Letter of Introduction” in *Harvard Theological Review*, pp. 55-57; J.I.H. McDonald, “Was Romans XVI a Separate Letter?” in *New Testament Studies*, pp. 369-372; E.J.Goodspeed, *New Chapters in New Testament Study*, pp. 25-26.

72 F.Kenyon, *Chester Beatty Biblical Papyri, Facsimile III*, p. xviii.

73 T.W.Manson, Letter to the Romans – and Others” in *Bulletin of the John Rylands Library*, pp. 224-240; G.Zuntz, *The Test of the Epistle: A Disquisition upon the Corpus Paulinum*, pp. 276-277. ரோமர் 16ம் அதிகாரம் எபேசு சபைக்கு எழுதப்பட்டது என்பதற்கு வேத ஆராய்ச்சியாளர்கள் பின்வரும் காரணங்களைச் சுட்டிக்காட்டுகின்றனர்: (1). ரோமர் 16ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனிதர்களில் ஒருவருடைய பெயர்கூட பிற்காலத்தில் பவுல் ரோமிலிருந்து எழுதிய நிருபங்களில் (எபேசியர், கொலோசெயர், பிலிப்பியர், பிலோமோன்) இடம்பெறாதமையால் இவ்வதிகாரம் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இருக்கவில்லை. (2). ரோமர் நிருபம் எழுதப்படுவதற்கு சிறிது காலத்திற்கு முன்பு எழுதப்பட்ட 1கொரிந்தியர் நிருபத்தில் ஆக்கில்லா பிரிஸ்கில்லா என்போரைப் பற்றியும் அவர்களது வீட்டில் கூடிவரும்


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

ஏற்பாட்டுப் புத்தகங்கள் ஒன்றாகத் தொகுக்கப்பட்ட காலத்தில் எபேசு சபைக்கு அனுப்பப்பட்ட தனிப்பட்ட ஒரு நிருபம் ரோமர் 16ம் அதிகாரமாக ரோமர் நிருபத்தோடு சேர்க்கப்பட்டது என்பது சிலரது தர்க்கமாக உள்ளது.[74] ஆனால் இத்தகைய விளக்கங்களுக்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை.[75] பவுல் ரோமருக்கு எழுதிய நிருபம் ஆரம்பத்தில் தற்போது இருக்கும் 16 அதிகாரங்களையும் கொண்டிருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.[76] கி.பி.49ல் யூதர்கள் ரோமிலிருந்து வெளியேற்றப்பட்டமை யால் 16ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள், ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லா லையும் போல வேறு பிரதேசங்களில் பவுலுக்கு அறிமுகமாகியவர்களாவர்.[77] பவுல் ரோம சபைக்கு நிருபத்தை எழுதும் காலத்தில் இவர்கள் மறுபடியுமாக ரோமுக்குத் திரும்பிச் சென்றிருந்தமையால், இவர்களுக்கும் பவுல் தனது வாழ்த்துதலை 16ம் அதிகாரத்தில் அனுப்பியுள்ளார்.

---

சபையையும் பற்றி குறிப்பிடப்பட்டிருப்பதனால் (1கொரி.16:14), இவர்கள் குறுகிய காலத்திற்குள்ளாக, அதாவது இரண்டு வருடங்களுக்குள்ளாக ரோமுக்குச் சென்று அங்கும் தங்கள் வீட்டில் ஒரு சபையை உருவாக்கியுள்ளதாகக் கூற முடியாது (ரோ.16:3-5அ). (3). எபேசுவில் இருந்த தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட நிருபத்தில் ஆக்கில்லாவுக்கும் பிரிஸ்கில்லாவுக்கும் பவுல் தனது வாழ்த்துதலை அனுப்புவ தனால் (2தீமோ.4:19) ரோமர் 16ம் அதிகாரம் எபேசு சபைக்கே எழுதப்பட்டுள்ளது. (4). ரோமர் 16:5ல் உள்ள "எப்பெனெத்" என்பவன் "ஆசியாவிலே" கிறிஸ்துவுக்கு முதற்பலன்" என்னும் விவரணம் ரோமுக்குப் பொருத்தமற்றது என்பதனாலும், இவன் எபேசுவைச் சேர்ந்தவன் என்பதனாலும் ரோமர் 16ம் அதிகாரம் எபேசுவுக்கே அனுப்பப்பட்டுள்ளது. (இவ்வசனம் சில வேதப் பிரதிகளில் "அகாயா" என்று இருப்பதனால் நம் தமிழ் வேதாகமத்தில் ஆசியா என்பதற்குப் பதிலாக அகாயா என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. ஆனால் ஆசியா என்பதே சரியானது). (5). ரோமர் 16:1-2ல் பவுல் பெபேயாளைப் புகழ்வதோடு அவளை ஏற்றுக்கொள்ளுமாறும் குறிப்பிட்டுள்ளார். இதனால், பவுல் தான் விஜயம் செய்திராத ரோம சபைக்கு இன்னுமொருவரைப் பற்றி இவ்வாறு சிபாரிசு செய்து எழுதியிருக்க முடியாது. (6). ரோமர் 16:17-19ல் உள்ள எச்சரிப்பு ரோமர் நிருபத்தின் தன்மைக்கும் பொருத்தமற்றது. ரோமர் நிருபத்தின் ஏனைய பகுதிகள் இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவிதமான பிரச்சனை ரோம சபையில் இருந்தது என்பதற்கு எவ்வித ஆதாரத்தையும் தருவதாய் இல்லை. எபேசு சபையிலேயே இத்தகைய பிரச்சனைகள் இருந்தமையால் ரோமர் 16ம் அதிகாரம் எபேசு சபைக்கே எழுதப்பட்டுள்ளது. (7). ரோமர் 15ம் அதிகாரத்தின் இறுதி வசனம் ஒரு நிருபத்தின் முடிவுரையாகவே இருப்பதனால் 16ம் அதிகாரம் ரோம சபைக்கு எழுதப்படவில்லை.

[74] McNeile-Williams, *Introduction to New Testament*, p. 155. சில வேத ஆராய்ச்சியாளர்கள் ரோமர் நிருபத்திலுள்ள ஆசீர்வாத உரை (அதாவது ரோமர் 16:25-27) நிருபத்தின் ஏனைய பகுதிகளின் மொழிநடையைவிட வித்தியாசமானதாக இருப்பதாகவும், இது பவுல் எபேசியருக்கும் தீமோத்தேயுவுக்கும் எழுதிய நிருபங்களின் மொழிநடையைப் போல இருப்பதாகவும் கூறுகின்றனர் (G.Zuntz, *The Text of the Epistles*, p. 227; T.W.Manson, BJRL, 31 (1948), pp. 224-240). இவ்வாசீர்வாத உரை பிற்காலத்தில் பவுலின் நிருபங்களை ஒன்றாகத் தொகுத்தவரினால் சேர்க்கப்பட்டதினாலேயே பவுலினுடைய மொழிநடையில் இல்லை என்பது சிலரது தர்க்கமாக உள்ளது (C.K.Barrett, *The Epistle to the Romans*, pp. 11-12; J.Weiss, *History of the Primitive Church Volume 2*, p. 284; R.Scott, *The Pauline Epistles*, p. 246; K. and L. Lake, *Introduction to the New Testament*, p. 98).

[75] ஆக்கில்லாவுக்கும் பிரிஸ்கில்லாவுக்கும் அவர்கள் ரோமிலும் எபேசுவிலும் இருக்கும் போது பவுல் தனது வாழ்த்துக்களை அனுப்பியிருப்பது எவ்வித குழப்பத்தையும் ஏற்படுத்த வேண்டியதில்லை. அக் காலத்தில் ரோமுக்கும் ஏனைய முக்கிய நகரங்களுக்கும் இடையில் போக்குவரத்துப் பாதைகள் இருந்ததோடு, விரைவான போக்குவரத்து வசதிகளும் இருந்தன. (*Cambridge Ancient History Volume 10*, pp. 387, 421-422). இதனால், ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் ரோமுக்கும், எபேசுவுக்கும் குறுகிய காலத்தில் பிரயாணம் செய்யக்கூடியவர்களாகவே இருந்துள்ளனர். மேலும், ஆக்கில்லாவுக்கும் பிரிஸ்கில்லாவுக்கும் ரோமிலும் எபேசுவிலும் வியாபார நிலையங்கள் இருந்துள்ளதாகவும் வேத ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர் (C.H.Dood, *Romans: Moffatt's New Testament Commentary*, p. xxi). இதனாலேயே இவர்கள் அடிக்கடி இரு இடங்களுக்கும் பிரயாணம் செய்கிறவர்களாகவும், இரு இடங்களிலும் சொந்தமாக வீடு வைத்து சபை வழிபாட்டுக்காகத் தங்களது வீட்டைக் கொடுத்தவர்களாகவும் இருந்துள்ளனர். ஆசியாவின் முதற்பலனாகிய "எப்பெனெத்" என்பவன் (ரோ.16:5) பவுல் இந்நிருபத்தை எழுதும் போது ரோமில் இருந்திருக்க முடியாது என்று கூறுவதும் அர்த்தமற்றது (M.Hitchcock, *A Study of Romans XVI*, p, 193). அதேபோல பவுல் தனக்கு அறிமுகமில்லாத சபைக்கு பெபேயாளை ஏற்றுக்கொள்ளும்படி எழுதியிருக்கமுடியாது என்னும் தர்க்கமும் அர்த்தமற்றது. இத்தர்க்கம் உண்மையானது என்றால் பவுல் ரோமருக்கு 1 முதல் 15 வரையிலான அதிகாரங்களையும் எழுதியிருக்க முடியாது (D.Guthrie, *New Testament Introduction*, p. 402). அத்தோடு பவுல் ரோமர் 16:17-19ல் குறிப்பிட்டுள்ள பிரச்சனை ரோம சபையில் இருக்கவில்லை என்று கூறுவதற்கும் எவ்வித ஆதாரமும் இல்லை (C.H.Dood, *Romans, Moffatt's New Testament Commentary*, pp. xxiii-xxiv, 242.

[76] B.N.Kaye, "To the Romans and Others Revisited" in *Novum Testamentum*. 18 (1976), pp. 37-77.

[77] D.A.Carson, D.J.Moo, & L.Morris, *An Introduction to the New Testament*, p. 247.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

பவுல் தான் ஸ்தாபிக்காத, அல்லது விஜயம் செய்யாத சபைக்கு பெயர்குறிப்பிட்டு பலருக்கு வாழ்த்துதல் அனுப்பியிருக்கமுடியாது என்னும் தர்க்கம் தவறானது. ஏனென்றால், பவுல் தான் ஸ்தாபித்த சபைகளுக்கு நிருபம் எழுதும் போது, சபை விசுவாசிகள் அனைவரையும் அவர் அறிந்திருந்தமையால் அவர்கள் அனைவரையும் தன் சகோதரர்களாகக் கருதி அவர்களுக்குப் பொதுவான வாழ்த்துதலை அனுப்புவ தையே தன் வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால் அவர் தான் ஸ்தாபிக்காத அல்லது விஜயம் செய்யாத சபைகளுக்கு நிருபம் எழுதும் போதே, அச்சபைகளில் தான் அறிந்திருந்த நபர்களுக்குத் தனிப்பட்ட வாழ்த்துக்களை அனுப்பினார். இதனால்தான் பவுல் ஸ்தாபிக்காத சபைகளில் அவர் ரோமருக்கும் கோலோசெயருக் கும் எழுதிய நிருபங்களில் பெயர் குறிப்பிட்டு தனிப்பட்ட மக்களுக்கு அனுப்பிய வாழ்த்துக்கள் உள்ளன. மேலும், ரோமர் 16ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர்க ளில் ஆக்கில்லா பிரிஸ்கில்லா என்போர் தவிர்ந்த ஏனையவர்கள் பவுலுக்கு அறிமுகமானவர்களாக இருந்தார்களே தவிர அவர்கள் அவரோடு சேர்ந்து ஊழியம் செய்தவர்களாக இருக்கவில்லை. இதனாலேயே அவர்களுடைய பெயர்கள் பவுல் எழுதிய ஏனைய நிருபங்களில் இடம்பெறவில்லை.[78] எனவே, ரோமர் 16ம் அதிகாரத் தில் தனிப்பட்ட நபர்களுக்கு வாழ்த்துக்கள் அனுப்பப்பட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு, இவ்வதிகாரம் ரோம சபைக்கு எழுதப்படவில்லை என்று கூறமுடியாது.

## ரோமர் நிருபத்தின் நோக்கம்

அப்போஸ்தலனாகிய பவுல், தான் ஸ்தாபிக்காத, பெரும்பாலும் அறிமுகமற்ற மனிதர்களை அங்கத்தினர்களாகக் கொண்டிருந்த ரோம சபைக்கு எதற்காக இந்நிருபத்தை எழுதினார் என்பது பற்றி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் பலவிதமாக கருத்துக்களும் விளக்கங்களும் உள்ளன. ரோம சபையில் யூதர்களே பெரும்பாலானவர்களாக இருந்ததாகக் கருதும் வேத ஆராய்ச்சியாளர்களில் சிலர், பவுல் தனது புறஜாதியார் மத்தியிலான ஊழியத்தை நியாயப்படுத்துவதற்காகவும், யூதர்களையும் புறஜாதியாரையும் ஒப்புரவாக்குவதற்காகவும் இந்நிருபத்தை எழுதியதா கக் கூறுகின்றனர்.[79] யூத மார்க்கத்திற்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையில் அக்காலத்தில் இருந்த தர்க்கங்களுக்குப் பதிலாக ரோமர் நிருபம் உள்ளது என்பது சிலரது கருத்தாக உள்ளது.[80] "யூதத் தேசியவாதத்திற்கு எதிராக, சுவிசேஷம் சகல மக்களுக்கும் உரியது என்பதைப் பவுல் இந்நிருபத்தில் உறுதிப்படுத்தியுள்ளார்" என்பது சில வேத ஆராய்ச்சியாளர்களின் தர்க்கமாக உள்ளது.[81] சில வேத ஆராய்ச்சியாளர்கள், யூதர்கள் கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றி கேட்கும் கேள்விகளுக்குப் பதிலாகவே இந்நிருபம் எழுதப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.[82] மேலும், யூதமார்க்கத்தின் ஒருபிரிவாக இருந்த ரோம சபையைச் சரியான சத்தியத்

[78] D.Guthrie, *New Testament Introduction*, pp. 401-402.
[79] B.Weiss, *Manual Introduction to the New Testament*, p. 301.
[80] J.Munck, *Paul and the Salvation of Mankind*, p. 407.
[81] A.H.McNeile, *Paul: His Life, Letters and Christian Doctrines*, p. 190.
[82] J.C.Beker, *Paul the Apostle*, pp. 77, 86.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

திற்குள் கொண்டுவருவதற்காகப் பவுல் இந்நிருபத்தை எழுதினார் என்பது சிலரது தர்க்கமாக உள்ளது.[83] ஆனால், இத்தகைய விளக்கங்கள் அனைத்தும், ரோம சபையில் புறஜாதிக் கிறிஸ்தவர்களே பெரும்பான்மையினராக இருந்தனர் என்பதை மறுதலிக்கும் கருத்துக்களாகவே இருப்பதனால், இவை ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கங்களாக இல்லை.[84]

ரோமர் நிருபத்தின் கடைசி அதிகாரத்தைப் பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட பகுதியாகக் கருதுபவர்கள், பவுல் தனது உபதேசம் பிரபலமடைவதற்காக இந்நிருபத்தை எழுதி இதை ரோமுக்கு மட்டுமல்ல சிரியா, பலஸ்தீனா, எபேசு போன்ற முக்கியமான இடங்களுக்கெல்லாம் அனுப்பியதாக் கூறுகின்றனர்.[85] பவுல் எருசலேமில் எதிர்நோக்கப் போகும் பிரச்சனையைக் கருத்திற்கொண்டவராக எருசலேம் சபைக்கு எழுதிய நிருபமாக இதனைக் கருதுபவர்கள், எருசலேமுக்குச் செல்லப் போகும் பவுல் அங்கு யூதமர்க்கத்தில் வைராக்கியமிக்கவர்களாய் இருந்த கிறிஸ்தவர்கள் தனக்கு எதிராகக் கொண்டுவரப்போகும் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் விதத்தில் இந்நிருபத்தை எழுதியுள்ளதாகக் கருதுகின்றனர். புறஜாதியாரின் சபைகளில் சேர்க்கப்பட்ட பணத் தோடு எருசலேமுக்குச் செல்லும் பவுல், அங்கு தான் உரையாற்றுவதற்காக எழுதிய பிரசங்கஉரையே இந்நிருபம் என்பது இவர்களது தர்க்கமாக உள்ளது.[86] இதனால், பவுல் புறஜாதியார் மத்தியில் தான் செய்யும் ஊழியத்திற்கு எதிரான குற்றச் சாட்டுகளைத் தகர்த்தெறியும் விதத்தில் இந்நிருபத்தை எழுதியுள்ளார் என்றும் இவர்கள் கருதுகின்றனர்.[87] பவுல் இந்நிருபத்தை எழுதும் போது எருசலேமுக்குச் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தார் (ரோ.15:25) என்பதற்காக அவர் எருசலேம் சபைக்கு, அல்லது, எருசலேமில் அவர் செய்யப்போகும் பிரசங்கத் திற்காக இந்நிருபத்தை எழுதினார் என்னும் முடிவுக்கு வருவது அர்த்தமற்றது. நிருபத்தின் ஆரம்பத்தில் இது “ரோம சபைக்கு” எழுதப்பட்டது என்னும் குறிப்பு சில

---

[83] M.Black, *Romans: New Century Bible Commentary*, pp. 22-23.

[84] J.Drane, “Why Did Paul Write Romans?” in *Pauline Studies*, pp. 223-224. அதேபோல, பவுல் ரோம சபையின் நிலைமையை அறியாதிருந்தார் என்றும், இந்நிருபத்தின் மூலம் ரோம சபையின் நிலைமையை நம்மால் அறிந்து கொள்ள முடியாமல் உள்ளது என்றும் சில வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுவதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கருத்தாகவே உள்ளது. பவுலுக்கு அறிமுகமானவர்கள் பலர் இச்சபையில் இருந்தமையால் (ரோ.16), அவர்கள் மூலம் பவுல் சபையின் நிலைமையைப் பற்றி நிச்சயம் அறிந்திருப்பார். மேலும், ரோமர் 1:8, 15:14 போன்ற வசனங்களும் ரோம சபையின் நிலைமையைப் பவுல் அறிந்திருந்ததற்கான ஆதாரமாக உள்ளது. அத்தோடு. 14ம் 15ம் அதிகாரங்களில் பவுல் ரோம சபையின் நிலைமைக்கு நேரடியாக பதிலளிப்பதையும் நாம் அவதானிக்கலாம் (A.J.M.Wedderburn. *Reasons for Romans*, pp. 54-65; J.R.Edwards, *Romans: New International Biblical Commentary*, p. 13; J.D.G.Dunn, *Romans 1-8: Word Biblical Commentary*, pp. lvi-lviii). எனினும் 14ம் 15ம் அதிகாரங்களை மட்டும் கருத்திற்கொண்டு, பவுல் ரோம சபையில் யூதர் புறஜாதியார் மத்தியில் இருந்த சர்ச்சையைத் தீர்ப்பதற்காகவே இந்நிருபத்தை எழுதினார் என்னும் சில வேத ஆராய்ச்சியாளர்களின் தர்க்கம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. சிலர் ரோம சபையில் மூன்று குழுவினர் இருந்ததாகக் கருதுகின்றனர் (S.Neill, *Jesus through Many Eyes*, p. 63). வேறு சிலர் ஐந்து குழுவினர் இருந்ததாகக் கூறுகின்றனர் (P.S.Minear, *The Obedience of Faith: The Purpose of Paul in in the Epistle to the Romans*. pp. 8-14). ஆனால் இத்தகைய விளக்கங்களுக்குப் போதிய ஆதாரங்கள் இல்லை.

[85] இவர்கள், ரோமர் 1:7லும் 1:15லும் “ரோம்” என்னும் சொல் சில ஆரம்பகால பிரதிகளில் இல்லாதிருப் பதையும் தங்களது கருத்திற்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டுகின்றனர் (T.W.Manson, “St. Paul’s Letter to the Romans – And Others” in *The Romans Debate*, pp. 3-15).

[86] J.Jervell, “The Letter to Jerusalem” in *The Romans Debate*. pp. 53-64; N.A.Dahl, *Studies in Paul: Theology for the Early Christian Mission*, p. 77.

[87] G.Bornkamm, “The Letter to the Romans as Paul’s Last Will and Testament” in *The Romans Debate*, pp. 16-28. எனினும் இவர், இந்நிருபம் ரோம சபைக்கு எழுதப்பட்டது என்பதை மறுதலிக்கவில்லை.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

வேதப்பிரதிகளில் இல்லாதபோதிலும், இது ரோம சபைக்கே எழுதப்பட்டது என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன.[88]

பவுல் தான் ஸ்தாபிக்காத ரோம சபைக்கு இந்நிருபத்தை எழுதியதன் நோக்கத்தைப் 15ம் அதிகாரம் அறியத்தருகின்றது. பவுல் ரோமுக்குச் செல்வதற்குப் பல தடவைகள் முயற்சி செய்தும் (ரோ.1:13-15) அங்கு ஏற்கனவே ஒரு சபை இருந்தமையால், அங்கு சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைத் தவிர்த்து வந்த பவுல் (ரோ.15:21-22), இதுவரையில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டாத ஸ்பானியா தேசத்திற்குச் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தார். இதைப்பற்றி ரோமர் 15:21-23ல் பின்வருமாறு பவுல் குறிப்பிட்டுள் ளார்:

> “நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு கிறிஸ்துவினு டைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன். உங்களிடத்தில் வருகிறதற்கு இதினாலே அநேகந்தரம் தடைப்பட் டேன். இப்பொழுது இந்தத் திசைகளிலே எனக்கு இடமில்லாதபடியினாலும், உங்களிடத்தில் வரும்படி அநேக வருஷமாய் எனக்கு மிகுந்த விருப்பம் உண்டாயிருக்கிறபடியினாலும், நான் ஸ்பானியா தேசத்திற்குப் பிரயாணம் பண்ணுகையில் உங்களிடத்தில் வந்து, உங்களைக் கண்டுகொள்ளவும், உங்களிடத்தில் சற்று திருப்தியடைந்த பின்பு, அவ்விடத்திற்கு உங்களால் வழிவிட்டனுப்பப்படவும், எனக்கு சமயங் கிடைக்குமென்று நம்பியிருக்கின்றேன்.”

பவுல் ரோமினூடாகவே ஸ்பானியாவிற்குப் போகத் திட்டமிட்டிருந்தபடியினால் (ரோ.15:28), தனது ஸ்பானிய ஊழியத்திற்கு ரோம சபையின் உதவியைப் பெற்றுக்கொள்வது இந்நிருபத்தை எழுதும் பவுலின் பிரதான நோக்கமாக இருந்தது. ரோமர் 15:24ல் “உங்களால் வழிவிட்டனுப்பப்படவும்” என்று தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ள பதம் மூலமொழியில் “ஒருவருடைய பிரயாணத்திற்கு உணவு பணம் என்பவற்றைக் கொடுத்து அனுப்புதல்” என்னும் அர்த்தமுடையது.[89] எனவே, பவுல் தான் ஸ்பானியாவில் செய்யப்போகும் ஊழியத்திற்கு உதவிசெய்யும்படி கேட்பதற்கா கவே இந்நிருபத்தை எழுதியுள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை. தனது ஆரம்ப கால ஊழியத்திற்கு அந்தியோகிய சபை உதவியாய் இருந்ததுபோல, ஸ்பானிய ஊழியத்திற்கு ரோம சபை உதவி செய்யும் என்பது பவுலின் எண்ணமாக இருந்தது.[90] இதனால், பவுல் தன்னையும் தனது ஊழியத்தையும் பற்றி ரோம சபை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக, தான் பிரசங்கிக்கும் செய்தியையும், ரோம சபை மக்களுக்கு அவசியமான ஆலோசனைகளையும் இந்நிருபத்தில் எழுதியுள்ளார். “ஸ்பானிய ஊழியத்திற்கு ரோம சபையின் உதவியைப் பெறவேண்டுமானால் தான் பிரசங்கிக்கும் செய்தியை அவர்களுக்கு விரிவாக விளக்கவேண்டிய அவசியம்

---

[88] உண்மையில் சில பிற்கால வேதப்பிரதிகளிலேயே ரோமுக்கு எழுதப்பட்டதைப் பற்றிய குறிப்பு இல்லை. ஆரம்பகால பிரதிகளில் அனைத்திலும் இக்குறிப்பு இருப்பதனால் இந்நிருபம் ரேம சபைக்கே எழுதப்பட்டுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை (B.Metzger, *A Textual Commentary on the Greek New Testament*, p. 505).
[89] L.Morris, *Romans: Pillar New Testament Commentary*, p. 518.
[90] *Ibid*. p. 17.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

பவுலுக்கு இருந்தது. பவுலின் எதிரிகள் அவருடைய ஊழியத்தையும் உபதேசத்தையும் பற்றி எதிரிடையான விமர்சனங்களைப் பரப்பி வந்தமையால், தான் பிரசங்கிக்கும் சுவிசேஷம் எத்தகையது என்பதை விளக்குவதற்காகப் பவுல் ரோம சபைக்கு இந்நிருபத்தை எழுதியுள்ளார்."[91] அதேசமயம், ரோமுக்குச் சென்று அங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்று நீண்டகாலமாகவே திட்டமிட்டிருந்த பவுல், அங்கு செல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காதமையால், ரோம சபைக்கு நிருபம் எழுதும்போது, தான் பிரசங்கிக்கும் சுவிசேஷத்தை விரிவாக எழுதியுள்ளார்.[92] மேலும், ஆக்கில்லா பிரிஸ்கில்லா என்போர் மூலமாக ரோம சபையைப் பற்றி தான் கேள்விப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டவராகவும், அச்சபைக்கு அவசியமான நடைமுறைரீதியான ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் இந்நிருபத்தில் பவுல் சேர்த்துள்ளார்.[93]

---

[91] *Ibid*. p. 17.
[92] G.B.Wilson, *Romans: A Digest of Reformed Comment*, p.11
[93] D.Guthrie, *New Testament Introduction*, p. 399.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

## ரோமர் நிருபத்தின் விடயங்கள்

பவுலினுடைய நிருபங்கள் அனைத்தும் அவரது காலத்தைய கடித அமைப்பு முறையிலேயே எழுதப்பட்டுள்ளன. அக்காலத்தைய மக்கள் அறிமுகவுரையுடனேயே கடிதங்களை ஆரம்பித்தனர். இவ்வறிமுகவுரையில் கடிதமானது யாரால் யாருக்கு எழுதப்படுகின்றது என்னும் விபரங்களும் வாழ்த்துரையும் குறிப்பிடப்பட்டிருக்கும்.[94] வாழ்த்துரையைத் தொடர்ந்து கடிதத்தைப் பெறுபவரின் சரீர சுகத்திற்கான பிரார்த்தனையும், தேவர்களுக்கான துதியும் இடம்பெறும். அதன் பின்பே கடிதத்தின் செய்தி எழுதப்படும். வேறு யாருக்காவது வாழ்த்துச் செய்திகள் கொடுக்கப்பட வேண்டியிருந்தால் அவற்றுடனும், சிறப்பான வாழ்த்துதலுடனும் கடிதம் நிறைவு பெறும்.[95] பவுலினுடைய நிருபங்களிலும் இத்தகைய ஒழுங்கு முறையை நாம் அவதானிக்கலாம்.[96] எனினும் பவுல் தன் வாழ்த்துரையைக் கிறிஸ்தவமயப்படுத்தியுள் ளார். இதனால்தான் அவர் தன் வாழ்த்துரையில் “கிருபையையும் சமாதானத்தையும்” சேர்த்துள்ளதோடு, தான் எழுதும் சூழ்நிலையையும், தனது வாசகர்களின் நிலையையும் கருத்திற்கொண்டு மேலதிகமான குறிப்புகளையும் எழுதியுள்ளார். இதனால் பவுலினுடைய நிருபங்களில் அறிமுகவுரை அக்காலத்தைய கடிதங்களின் வாழ்த்துரை யைவிட நீளமானவைகளாக உள்ளன.

### 1. நிருபத்தின் அறிமுகவுரை (ரோ.1:1-17)

பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் முதலாம் அதிகாரத்தின் முதல் 17 வசனங்களும் அறிமுகவுரையாக உள்ளது. இதில், பவுல் தன்னை இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனாகவும்,[97] அப்போஸ்தலனாகவும்,[98] சுவிசேஷப்பணிக்காகப் பிரித்தெடுக்கப் பட்டவனாகவும் அறிமுகப்படுத்தியுள்ளார் (ரோ.1:1). இந்நிருபம் ரோமிலுள்ள கிறிஸ்தவர்

---

[94] அக்காலத்தைய கடித அமைப்பு முறையின் இத்தகைய அம்சங்களைப் பழைய ஏற்பாட்டில் எஸ்றா 7:12, தானியேல் 4:1லும், இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட தள்ளுபடியாகமங்க ளில் ஒன்றான 2பாரூக் 72:8லும் நாம் அவதானிக்கலாம். புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் 15:23லும், 23:26லும் இத்தகைய கடிதங்கள் உள்ளன. தள்ளுபடியாகமங்கள் பற்றிய விபரங்களுக்கு எனது “*புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு*” எனும் நூலில் 69 முதல் 73 வரையிலான பக்கங்களைப் பார்க்கவும்.

[95] W.G.Doty, *Letters in Primitive Christianity*, pp. 23-33; P.T.O’Brien, “Letters, Letter Forms” in *Dictionary of Paul and and His Letters*, pp. 550-553.

[96] பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் மட்டும் அறிமுகவுரை வழமைக்கு மாறான நிலையில் இருப்பதை நாம் அவதானிக்கலாம். இந்நிருபத்தில் பவுல் தன் வாசகர்களுக்காகத் தேவனைத் துதித்து அவர்களுக்காக மன்றாடும் குறிப்பு இடம்பெறவில்லை.

[97] ஊழியக்காரன் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள “டூலொஸ்” (*doulos*) என்னும் கிரேக்கப் பதம் “அடிமை” என்னும் அர்த்தமுடையது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தங்கள் எஜமான்க ளை நேசிக்கும் அடிமைகள் ஆயுள்முழுவதும் பணிபுரிவதற்காகத் தங்களை அர்ப்பணிப்பதுபோல (யாத்.21:2-6), பவுலும் இயேசுகிறிஸ்துவிற்காகப் பணிபுரிவதற்காக ஆயுட்கால அடிமையாகத் தன்னை அர்ப்பணித்துள்ளார். “தான் இயேசுகிறிஸ்துவின் உடமை என்றும், அவருக்கு சேவைசெய்வது தன் கடமை என்றும் பவுல் இதன் மூலம் அறியத்தருகின்றார்” (C.Vaughan & B.Corley, *Romans: Bible Study Commentary*, p. 17).

[98] “அப்பொஸ்டொலொஸ்” என்னும் கிரேக்கப் பதமே தமிழில் “அப்போஸ்தலன்” என்று எழுதப்பட்டுள் ளது. இதனர்த்தம் “அனுப்பப்பட்டவன்” என்பதாகும். இது அதிகாரபூர்வமாக அனுப்பப்படும் பிரதிநிதி யைக் குறிக்கும் பதமாகும் (R.H.Rengstrof, “Apostolos” in *Theological Dictionary of the New Testament Volume 1*, pp. 407-445). பவுல் இயேசுகிறிஸ்துவின் அதிகாரபூர்வமான பிரதிநிதியாகப் பணிபுரிந்துள்ளார் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

களுக்கு எழுதப்பட்டுள்ளது என்பதை 2ம் வசனம் அறியத்தருகின்றது. 3ம் வசனத்தில் பவுல் தான் வழமையாக உபயோகிக்கும் வாழ்த்துதலைக் குறிப்பிட்டுள்ளார்.[99] பவுல் தான் பிரசங்கிக்கும் சுவிசேஷச் செய்தியையே விரிவாக இந்நிருபத்தில் எழுதியுள்ளமையால், அறிமுகவுரையில் இதைப் பற்றிய மூன்று முக்கிய விடயங்களை 4ம் 5ம் வசனங்களில் சுட்டிக்காட்டியுள்ளார். இவற்றில் முதலாவது, 'சுவிசேஷம் தேவனுடையது' இரண்டாவது இது 'பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டது.'[100] மூன்றாவது, இது 'இயேசுகிறிஸ்துவைப் பற்றியது'. இவ்வசனங்களில் பவுல் இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்தைப் பற்றியும் மனிதத்துவத்தைப் பற்றியும் சில விடயங்களையும் குறிப்பிட்டுள்ளார். மேலும், 6ம் 7ம் வசனங்களில், இயேசுகிறிஸ்துவே தன்னை அப்போஸ்தலனாக்கியுள்ளதையும் அறியத்தருகின்றார். இதனைத் தொடர்ந்து, அக்கால கடித அமைப்பு முறையின்படி பவுல் ரோம சபை விசுவாசிகளுக்காகத் தேவனைத் துதிப்பதோடு (ரோ.1:8-9), தான் ரோமுக்கு வருவதற்குப் பல தடவைகள் முயற்சித்தும், தன்னால் வரமுடியாமற் போதைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார் (ரோ.1:10-13). அறிமுகவுரையின் இறுதியில், சகல மக்களுக்கும் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தான் கடமைப்பட்டுள்ளதாகவும் (ரோ.1:14), ரோமிலும் சுவிசேஷத்தை அறிவிக்க தான் விரும்புவதாகவும் (ரோ.1:15), இதைக் குறித்து தான் வெட்கப்படுவதில்லை என்றும் (ரோ.1:16) தெரிவித்துள்ளார். அறிமுகவுரையின் கடைசி வசனம், ரோமர் நிருபத்தில் பவுல் எழுதப்போகும் செய்தியின் மையக்கருவாக உள்ளது (ரோ.1:17).

## 2. மனிதனுக்குத் தேவனுடைய நீதி அவசியம் (ரோமர் 1:18-3:20)

பாவியான மனிதன் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் தேவநீதியைப் பெற்று, தேவனுக்கு முன்பாகப் பரிசுத்தவானாக இருக்கின்றான் என்னும் கிறிஸ்தவ மார்க்கத்தின் அடிப்படைச் செய்தியை ரோமர் நிருபத்தில் விரிவாக எழுதும் பவுல், முதலாவதாக, "மனிதனுக்குத் தேவனுடைய நீதி அவசியம்" என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் நிருபத்தின் முதலாவது பகுதியில், அதாவது 1:18-3:20ல் மனிதனின் உண்மையான நிலையை, அதாவது அவன் பாவி என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். மனிதன் பாவியாக இருப்பதனால் அவனுக்குத் தேவனுடைய நீதி அவசியமாக உள்ளது.[101] ரோம சபையில் யூதர்களும் புறஜாதியாரும் இருந்தமையால் 1:18-32ல் புறஜாதி உலகம் பாவத்தில் இருப்பதாகவும், 2:1-3:8ல் யூத உலகம் பாவத்தில் இருப்பதாகவும் கூறும் பவுல், 3:9-20ல் முழு உலகமும் பாவத்தில்

[99] இது அக்கால கிரேக்க மற்றும் யூத வாழ்த்துதல்களின் சேர்க்கையாகும். கிரேக்க வாழ்த்துதலான "காரிஸ்" (மகிழ்ச்சியாயிருங்கள்) என்பதும், யூத வாழ்த்துதலான "ஷாலொம்" (சமாதானம் உண்டாவதாக) என்பதும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு கிறிஸ்தவ அர்த்தமும் பவுலால் கொடுக்கப்பட்டுள்ளது. "இது பவுலினுடைய சுவிசேஷத்தின் சுருக்கவுரையாக" (J.R.W.Stott, *The Message of Galatians*, p. 16) "கிறிஸ்தவ உபதேசத்தின் சாராம்சமாக" உள்ளது (T.George, *Galatians: The New American Commentary*, p. 85).

[100] இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷம் பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டுள்ளதாகவே பவுல் இவ்வசனங்களில் குறிப்பிட்டுள்ளார். இதனால், அவரைப் பற்றி பிறமத நூல்களிலும் முன்னறிவிக்கப்பட்டுள்ளதாக் கூறுகிறவர்களின் தர்க்கங்கள் வேதாகம உபதேசத்திற்கு முரணானது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும் இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது *மனுக்குலத்திற்கான மகத்தான வெளிப்படுத்தல்* என்னும் நூலில் 87 முதல் 117 வரையிலான பக்கங்களைப் பார்க்கவும்.

[101] தேவனுக்கு முன்பாக நிற்பதற்கு மனிதனிடம் சுயமாக நீதி இல்லை. அவனுடைய சுய நீதி தேவனுக்கு முன் நிற்பதற்கு அவனுக்கு எவ்வித தகுதியையும் கொடுப்பதில்லை.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

இருப்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். புறஜாதியாரைப் பொறுத்தவரைத் தேவன் இயற்கையின் மூலமாகவும், மானிட இதயத்திலும் தம்மைப்பற்றி வெளிப்படுத்தியுள்ள போதிலும் (ரோ.1:18-20),[102] அவர்கள் தேவனை ஏற்றுக்கொள்ளாமலும் மகிமைப்படுத் தாமலும், தங்களுடைய கற்பனைகளின்படி தங்களுக்கென்று மதங்களை உருவாக்கிக் கொண்டனர் (ரோ.1:21-23, 25).[103] இதனால் அவர்களுடைய வாழ்க்கை ஒழுக்கநெறி கெட்டதாக, பாவத்தினால் நிறைந்துள்ளதைப் பவுல் சுட்டிக்காட்டியுள்ளார் (ரோ.1:24, 26-32).[104] பவுல் ரோமர் 1:26-31ல் குறிப்பிட்டுள்ள பாவங்கள் யூதர்களுடைய வாழ்வில் காணப்படாத போதிலும்[105] தேவனுடைய பார்வையில் அவர்களும் பாவிகளாகவே இருந்தனர் (ரோ.2:1-3:8).[106] யூதர்கள் வேனுடைய நியாயப்பிரமாணத்தைப் பெற்று,

---

[102] இதைப் பற்றிய விளக்கத்திற்கு எனது "மனுக்குலத்திற்கான மகத்தான வெளிப்படுத்தல்" என்னும் நூலின் 12 முதல் 27 வரையிலான பக்கங்களைப் பார்க்கவும். பவுல் ரோமர் நிருபத்தில், "உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளினாலே… தெளிவாய்க் காணப்படும்" என்பது இயற்கை உலகத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள வெளிப்படுத்தலைப் பற்றிய விவரணமாக உள்ளது (ரோ.1:20). ரோமர் 1:19ல் தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளெ வெளிப்பட்டிருக்கிறது" என்னும் வாக்கியத்தில் "அவர்களுக்குள்ளே" என்னும் சொற்பிரயோகம், மனிதர்களுடைய உள்ளத்தில் கொடுக்கப்பட்டள்ள தேுவனுடைய வெளிப்படுத்தலைச் சுட்டிக்காட்டுகிறது. சில வேத ஆராய்ச்சியாளர்கள் இச்சொற்பிரயோ கத்தை "அவர்கள் மத்தியில்" என்று மொழிபெயர்த்தாலும் (C.E.B.Cranfield, *Romans: The International Critical Commentary Volume 1*, p. 113), "அவர்களுடைய மனங்களில்" என்பதே சரியான மொழி பெயர்ப்பாகும் (C.Vaughan & B.Corley. *Romans: Bible Study Commentary*, p. 27).

[103] ரோமர் 1:21-23ல் பவுல் குறிப்பிட்டுள்ள விடயமே உலக மதங்களின் உருவாக்கத்திற்குக் காரணமாயுள்ளது. இவ்வசனங்களின்படி தேவ வெளிப்படுத்தலை நிராகரித்ததன் விளைவே உலக மதங்களின் உருவாக்கம் என்பது தெளிவாகின்றது.

[104] 24ம் 26ம் 28ம் வசனங்களில் தேவன் மக்களைப் பாவத்திற்கு "ஒப்புக்கொடுத்தார்" என்று குறிப்பிடப் பட்டுள்ளமையால் மானிட பாவத்திற்குத் தேவனே காரணர் என்று நாம் கருதலாகாது. தேவவெளிப்படுத் தலை நிராகரித்ததன் விளைவே மனிதர்கள் பாவத்தில் வாழ்வதற்கான காரணம் என்பதையே இவ் வசனங்களில் உள்ள "இதினிமித்தம்" என்னும் வார்த்தை அறியத்தருகின்றது. "மெய்யான தேவனுக்குப் பதிலாக மனிதர்கள் பொய்யான தெய்வங்களை உருவாக்கிக் கொண்டதற்கான (ரோ.23,25,26-27), தேவ தண்டனையாக மானிட பாவ வாழ்வு இருப்பதையே பவுல் இவ்வசனங்களில் சுட்டிக்காட்டியுள்ளார்" (J.R.Edwards, *Romans: New International Biblical Commentary*, pp. 53-54). மனிதன் உண்மையான தேவனை நிராகரிக்கும் போது தேவனும் மனிதனை அந்த நிலையிலேயே இருக்க வைத்துவிடுகிறார். உதாரணத்திற்கு ஆரம்பத்தில் பார்வோன் தன் இதயத்தைக் கடினப்படுத்தினான் (யாத்.7:22). பின்னர் அவன் அந்நிலையிலேயே இருக்கும் விதத்தில் அவனுடைய இதயத்தைக் கடினப்படுத்தினார் (யாத்.4:21-22). "தேவனைப் பற்றிய உண்மையை ஏற்றுக்கொள்ளாமல் பொய்யையே மக்கள் தொடர்ந்தும் நம்புகிறவர்களாய் இருந்தால் சத்தியத்தை அவர்கள் அறிந்து கொள்ள முடியாத நிலையில் அவர்களை வைத்துவிடுவார்" (*Ibid*. p. 54). புறஜாதி மக்கள் தேவசத்தியத்தை அடக்கி வைத்துள்ளார்கள் (ரோ.1:18) என்றும், தேவவெளிப்படுத்தலை நிராகரித்துள்ளார்கள் (ரோ.1:19-20) என்றும், தேவமகிமையை அவமதித் துள்ளார்கள் (ரோ.1:21-23) என்றும் பவுல் இவ்வசனங்களில் அறியத்தந்துள்ளார். எனவே, "தேவதண்டனை எப்பொழுதும் நியாயமானதாகவே இருக்கும். அவர் காரணமின்றி எவரையும் தண்டிக்க மாட்டார்" (J.A.Witmer, *Romans: The Bible Knowledge Commentary*, p. 442). எனவே, தேவன் மக்களைப் பாவத்திற்கு ஒப்புக்கொடுத்தது, அவர்களது செயலுக்கான நியாயமானதும் நீதியானதுமான தண்டனையா கவே உள்ளது.

[105] தேவன் யூதர்களுக்கு கொடுத்திருந்த நியாயப்பிரமாணத்தில் மக்களுக்கான ஒழுக்க நெறிகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இதனால், அக்காலத்தில் நியாயப்பிரமாணத்தைப் பெறாத மக்கள் இயற்கையின் மூலமாகக் கொடுக்கப்பட்ட தேவனுடைய வெளிப்படுத்தலை நிராகரித்து வாழும்போது ஒழுக்கக்கேடானவர்களாக இருந்தனர். உண்மையில், யூத மார்க்கமும் பிற்காலத்தில் கிறிஸ்தவமுமே உலகத்திற்கு ஒழுக்கநெறிகளை அறிமுகப்படுத்தியது. "அக்காலத்தில் வேதாகமம் செல்லாத இடங்களில் வாழ்ந்த மக்களுடைய வாழ்க்கை ரோமர் 1:26-32ல் சித்தரிக்கப்பட்டுள்ள விதமாகவே இருந்தது" (W.Barclay, *Romans: The Daily Study Bible*, pp. 30-32).

[106] ரோமர் 2ம் அதிகாரத்தில் 17ம் வசனத்திலேயே பவுல் யூதர்களைப் பெயரிட்டு குறிப்பிட்டுள்ளமையால், இவ்வதிகாரத்தில் முதல் 16 வசனங்களிலும் பவுல் யூதர்களைப் பற்றியல்ல, அக்கால உலகில் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்த தத்துவஞானிகளையும், மற்றும் ஒழுக்கவியலா ளர்களையும் பற்றியே குறிப்பிட்டுள்ளார் என்று சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அரசியல் அதிகாரரிகளைப் பற்றியே இவ்வசனங்களில் எழுதப்பட்டுள்ளது என்றே மாட்டின் லூத்தர் கருதினார் (M.Luther, *Lectures on Romans*, p. 38). யூதர் புறஜாதியார் என்னும் இரு இனத்தவரையும் பற்றிய விவரணமாக இவ்வசனங்களைச் சில வேத ஆராய்ச்சியாளர்கள் விளக்குகின்றனர் (E.H.Gifford, *Romans: The Speaker's Commentary*, p. 71; C.K.A.Barrett, *Romans: The Harper's New Testament Commentary*, p. 43) ஆனால், 17ம் வசனத்திலேயே யூதர்கள் பெயரிட்டு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அவ்வசனம் புதியதோர் பகுதியை அறிமுகப்படுத்தும் விதத்தில் எழுதப்படவில்லை. மேலும், இவ்வசனம் அதற்கு முன்னுள்ள வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தர்க்கத்தின் தொடர்ச்சியாகவே இருப்பதனால், "முதலாம்


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

தேவனுடைய ஒழுக்கவிதிமுறைகளை அறிந்திருந்தபோதிலும், அவர்கள் புறஜாதியாரைக் குற்றப்படுத்தி வந்ததோடு, (ரோ.2:1அ),[107] அவர்களும் நியாயப்பிரமாணக் கட்டளைகளை மீறி நடந்தனர். இதனால், புறஜாதியாரைப் போலவே யூதர்களும் தேவ கோபாக்கினைக்கு உட்பட்டவர்களாக இருந்தனர் (ரோ.2:1ஆ-5).[108] தேவனுடைய ஆக்கினைக்குப் புறஜாதியாருக்கு எவ்வாறு "போக்கு சொல்ல இடமில்லாதிருந்ததோ" (ரோ.120) அதேவிதமாகவே யூதர்களுடைய நிலைமையும் இருந்தது (ரோ.2:1). தேவன் பட்சபாதமற்றவராக (ரோ.2:11), சத்தியத்தின்படி (ரே.2:2) மக்களை நியாயந்தீர்ப்பவராக இருக்கின்றார். அதேசமயம் மனிதர் பாவம் செய்யும் போது தேவன் மௌனமாய் இருப்பதனால் அவர் தண்டிக்கமாட்டார் என்று நாம் எண்ணக்கூடாது என்பதையும் பவுல் இவ்வசனங்களில் சுட்டிக்காட்டியுள்ளார். மனிதர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புவதற்குச் சந்தர்ப்பமளித்து தேவன் தற்காலத்தில் பொறுமையாயிருந்தாலும், நியாயத்தீர்ப்பு நாளில் மனந்திரும்பாதவர்களைத் தண்டிப்பார் (ரோ.2:4-5).

ரோமர் 2:6-13ல் பவுல் "கிரியையினால் இரட்சிப்பு" என்னும் உபதேசத்தைப் போதிக்கவில்லை. இரட்சிப்பு தேவனுடைய கிருபையினால் கிடைக்கும் ஈவு என்பதே பவுலினுடைய போதனையின் அடிப்படைச் சத்தியமாகும் (எபே.2:8-9). ரோமர் நிருபத்தில், விசுவாசம் அதாவது இயேசுகிறிஸ்துவில் ஒருவன் வைக்கும் விசுவாசம் அல்லது இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷத்தை விசுவாசிப்பது ஒரு கிரியை யாகக் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். ரோமர் 1:7லும் 16:25லும் இது "விசுவாசத்துக்குக் கீழ்ப்படிதல்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே. "2ம் அதிகாரத் தில் 'நன்மைசெய்தவர்கள்' அல்லது 'நற்கிரியை செய்தவர்கள்' என்பது (ரோ.2:7,10) 'சுவிசேஷசெய்திக்கு கீழ்ப்படிந்தவர்களையே' குறிக்கின்றது."[109] இதனால்தான் 8ம் வசனத்தில், நற்கிரியை செய்யாதவர்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்கள்" என்று சித்தரிக்கப்பட்டுள்ளனர். "மானிட கிரியைகள் ஒன்றில் விசுவாசத்தின் வெளிப்பாடாக அல்லது அவிசுவாசத்தின் வெளிப்பாடாக இருக்கும்."[110] இயேசுகிறிஸ்துவும் தம்மை விசுவாசிப்பதை நற்கிரியை என்றே குறிப்பிட்டுள்ளார் (யோவா.5:29).[111] உண்மையில், "ஒருவனது நடத்தைமுறை

---

வசனத்திலிருந்தே பவுல் யூதர்களைப் பற்றியே எழுதியுள்ளார்" (C.E.B.Cranfield, *Romans: International Critical Commentary*, pp. 138-139) என்பதை மறுப்பதற்கில்லை.

[107] புறஜாதியாரின் பாவங்களில் தன்னினச்சேர்க்கையே யூதர்கள் அவர்களைக் குற்றப்படுத்துவதற்கான பிரதான பாவமாயிருந்தது (J.R.Edwards, *Romans: New International Biblical Commentary*, pp. 61).

[108] "தேவ கோபாக்கினை" என்பது, பாவத்தின் மீதான தேவனுடைய நீதியான தீர்ப்பாகும். இது "பாவத்திற்கு எதிரான தேவனுடைய தனிப்பட்ட பிரதிக்கிரியையாய்" (C.K.A.Barrett, *Romans: The Harper's New Testament Commentary*, p. 33) "பாவத்தின் மீதான தேவனுடைய பரிசுத்த வெறுப்பின் வெளிப்பாடாக" (C.Vaughan & B.Corley, *Romans, Bible Study Commentary*, p. 25), "தேவனுடைய பரிசுத்தத்தை முரண்படுத்தும் சகலவற்றின் மீதுமான அவருடைய கடுமையான எதிர்ப்பாக" (J.Murray, *Romans: The New International Commentary on the New Testament Volume 1*, p. 35) உள்ளது. தேவன் அன்புள்ளவர் என்பது உண்மை என்றாலும், அவர் பாவத்தை வெறுப்பவராகவும் பாவியைத் தண்டிப்பவராகவும் இருக்கின்றார் என்பதை நாம் மறக்கலாகாது (மத்.3:7, லூக்.3:7, ரோ.3:7, ரோ.2:5, எபே.5:6, கொலோ.3:6, வெளி.6:16-17, 11:18, 16:19, 19:15). உண்மையில், தேவனை நிராகரிப்பவர்கள் அவரது கோபத்திற்கு உட்படுவார்கள் என்பதை மறுப்பதற்கில்லை (2தெச:1:6-10, ரோ.1:18).

[109] J.R.Edwards, *Romans: New International Biblical Commentary*, pp. 67.

[110] L.Morris, *Romans:Pillar New Testament Commentary*, p. 116.

[111] இவ்வசனம் பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது *கர்த்தரின் வார்த்தைகளில் கடினமான வரிகள்* என்னும் நூலில் 98 முதல் 102 வரையிலான பக்கங்களைப் பார்க்கவும்.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

அனது இதயத்தின் நிலையை வெளிப்படுத்தும்.”[112] எனவே, இயேசுகிறிஸ்துவை விசுவாசியாமல், அவரை நிராகரிப்பவர்கள் தேவ கோபாக்கினையைத் தங்கள் மீது குவித்துக் கொள்ளுகிறார்கள் என்றே பவுல் இப்பகுதியில் எழுதியுள்ளார். இயேசுகிறிஸ்துவினால் மட்டுமே வரவிருக்கும் தேவ கோபாக்கினையிலிருந்து மக்களை விடுவிக்கமுடியும் என்பதனால் (1தெச.1:10), அவரை விசுவாசியாதவர்கள் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுவார்கள் என்பதை மறுப்பதற்கில்லை (யோவா.3:36).[113]

புறஜாதியாருடைய பாவங்கள் காரணமாக அவர்களை இழிவானவர்களாகக் கருதிய யூதர்களுக்கு, அவர்கள் யூதர்களைவிடவும் உயர்வான நிலையில் இருப்பதைப் பவுல் 2:14-15ல் சுட்டிக்காட்டியுள்ளார். புறஜாதி உலகம் ஒழுக்க நெறியற்றதாகப் பாவங்களில் இருப்பது உண்மையென்றாலும், அவர்களிலும் தேவனுடைய ஒழுக்கநெறிகளைக் கடைபிடித்தவர்கள் உள்ளனர். தேவன் யூதர்களுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்து தமது ஒழக்கச்சட்டத்தை அவர்களுக்கு விளக்கியுள்ளபோதிலும், இத்தகைய எழுதப்பட்ட ஒழுக்கச் சட்டத்தைப் பெறாத புறஜாதியார் “சுபாவப்படி தேவனுடைய ஒழுக்க விதி முறைகளைப் பின்பற்றுவதாகப்” பவுல் கூறுகின்றார். இதற்குக் காரணம், தேவனுடைய நியாயப்பிரமாணம் அவர்களுடைய இருதயங்களில் எழுதப்பட்டுள்ளது என்பதையும் பவுல் இவ்வசனங்களில் சுட்டிக்காட்டியுள்ளார். யூதர்களுக்கும் தேவனுடைய ஒழுக்கச் சட்டம் அவர்களுடைய இருதயங்களில் கொடுக்கப பட்டிருந்தது.[114] ஆனால், புறஜாதியாருக்குக் கொடுக்கப்படாத நியாயப்பிரமாணம் யூதர்களிடம் இருந்தது. அப்படியிருந்தும் நியாயப்பிரமாணத்தைப் பெறாத புறஜாதிகள் மத்தியில் யூதர்களை விட ஒழுக்கத்தில் உயர்வானவர்களும் இருந்துள்ளனர்.[115]

---

112 J.A.Witmer, *Romans: The Bible Knowledge Commentary*, p. 445.

113 இயேசுகிறிஸ்துவைப் பற்றி கேள்விப்படாதவர்களுக்கு என்ன நடக்கும் என்பதைப் பற்றிய வேதாகமப் போதனையை அறிந்து கொள்ள எனது *மனுக்குலத்திற்கான மகத்தான வெளிப்படுத்தல்* என்னும் நூலின் 117 முதல் 139 வரையிலான பக்கங்களைப் பார்க்கவும்.

114 இயற்கை உலகத்தின் மூலமும் மானிட இதயத்திலும் கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய பொதுவான வெளிப்படுத்தல் சகல மக்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள வெளிப்படுத்தலாகும். சங்கீதம் 19:1-6 அப்போஸ்தலர் 14:16-17, ரோமர் 1:19-20 போன்ற வசனங்களில் இயற்கையின் மூலம் கொடுக்கப்பட் டுள்ள தேவ வெளிப்படுத்தலைப் பற்றி விளக்கப்பட்டுள்ளன. ரோமர் 2:14-15லும் பிரசங்கி 3:11லும் மானிட இதயத்தில் கொடுக்கப்பட்டுள்ள தேவவெளிப்படுத்தலை அறியத்தருகின்றன. பிரசங்கி 3:11ல், சகலத்தையும் அதினதின் காலத்தில் நோத்தியாய் செய்த தேவன், நித்தியத்தை மனிதர்களுடைய உள்ளத்தில் வைத்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனத்தில் நம் தமிழ் வேதாகமத்தில் உள்ள “உலகம்” என்னும் பதத்தை மூலமொழியின்படி “நித்தியம்” என்றே மொழிபெயர்க்கவேண்டும். இவ்வசனத்தில் அப்பதத்தை “உலகம்” என்று மொழிபெயர்ப்பது தவறாகும் (D.A.Garrett, *Proverbs, Ecclesiastes, Song of Songs: The New American Commentary*, p. 229). இதனால் திருவிவிலியத்தில் இவ்வசனம் “காலத்தைப் பற்றிய உணர்வை மனிதருக்குத் தந்திருக்கிறார்” என்றும், மோனஹன் என்பாருடைய மொழிபெயர்ப்பில் “நித்திய கால நினைவையும் அவர்கள் உள்ளத்தில் வைத்திருக்கிறார்” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில், மனிதனுடைய உள்ளத்தில் நித்தியத்தைக் குறித்த ஒரு உணர்வைத் தேவன் வைத்துள்ளார் என்பதே இவ்வசனத்தின் அர்த்தமாகும் (M.A.Eaton, *Ecclesiastes: Tyndale Old Testament Commentaries*, p. 81). தேவன் மட்டுமே நித்தியமானவராக இருப்பதனால், இது தேவனைப் பற்றிய உணர்வாகவே உள்ளது. இதனால்தான் தேவனை வழிபடவேண்டும் என்னும் உணர்வு எல்லா மனிதருடைய உள்ளத்திலும் இயற்கையாகவே உள்ளது. ஆனால், மனிதர்கள் தேவனுடைய வெளிப்படுத்தலை நிராகரித்து, தங்கள் அறிவுக்கேற்றபடி செயல்படுவதனால், உண்மை யான தேவனை வழிபடாமல், தாங்கள் உருவாக்கின தெய்வங்களை வழிபட்டுவருகின்றனர் (ரோ.1:21-25).

115 கிறிஸ்தவரல்லாதவர்கள் மத்தியில் ஒழுக்கநெறியுள்ளவர்கள் இருப்பதற்கும், பிற மதங்களில் ஒழுக்கம் சம்பந்தமான போதனைகள் இருப்பதற்கு, தேவன் தமது நீதிச் சட்டத்தை அவர்களுடைய உள்ளங்களில் எழுதியுள்ளமையே காரணமாகும். எனினும் புராதன காலத்து மதங்கபள் அனைத்தும் ரோமர் முதலாம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளபடி, தேவனை நிராகரித்து மானிட கற்பனைகளில் உருவானவைகளாக இருப்பதனால் அவற்றில் ஒழுக்கக்கேடான அம்சங்களும் இருந்தன. பிற்காலத்தில் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் கீழ் கிறிஸ்தவம் முழு உலகிலும் பரவியமையால், ஐரோப்பியர்களினால்


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

எனவே, யூதர்கள் புறஜாதியாரைக் குற்றஞ் சாட்டுவது நியாயமற்றது என்பதைப் பவுல் அறியத்தருகின்றார். மனிதருடைய உள்ளத்தில் தேவனுடைய நியாயப்பிரமாணம் எழுதப்பட்டுள்ளது என்னும் உண்மையைத் தற்காலத்தில் புரிந்து கொள்ளமுடியாவிட்டாலும், தேவனுடைய நியாயத்தீர்ப்பு நாளில் இதனை அறிந்து கொள்ளலாம் என்பதையும் பவுல் சுட்டிக்காட்டியுள்ளார் (ரோ.2:16).

தேவனுடைய ஒழுக்கநெறிச் சட்டத்தைத் தங்கள் இருதயங்களில் பெற்றிருந்த புறஜாதிகள் அச்சட்டத்தை மீறி நடந்தது போலவே, நியாயப்பிரமாணத்தைப் பெற்ற யூதர்களும் அவற்றின் கட்டளைகளை மீறிநடந்தனர். அவர்களது இத்தகைய நிலைமையை 2:17-23ல் பவுல் சுட்டிக்காட்டி, இதனால், தேவனுடைய நாமம் புறஜாதியாருக்குள்ளே தூஷிக்கப்படுகின்றது என்று குறிப்பிட்டுள்ளார் (2:24). நியாயப் பிரமாணம் தங்களிடம் இருக்கிறது என்பதில் யூதர்கள் பெருமிதம் கொண்டனர். ஆனால் அவர்கள் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவில்லை.[116] “தாங்கள் நியாயப்பிரமாணத்தை வைத்திருப்பதனால் அது தங்களைப் பாதுகாக்கும் என்று யூதர்கள் நினைத்தார்கள். ஆனால் நியாயப்பிரமாணம்

---

பலவந்தமாக அறிமுகப்படுத்தப்பட்ட கிறிஸ்தவத்தினதும் ஐரோப்பிய கலாச்சாரத்தினதும் செல்வாக்கு உலக மதங்கள் ஒழுக்கரீதியாக சீர்திருத்தியது. இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது பட்டப்படிப்புக்கான ஆராய்ச்சியான *The Legacy of the Controversies* என்னும் நூலின் மூன்றாம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

116 ரோமர் 2:21-22ல் களவு, விபசாரம், விக்கிரகாராதனை போன்ற பாவங்கள் இருப்பதாகப் பவுல் குறிப்பிட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது சில வேத ஆராய்ச்சியாளர்களின் எண்ணமாக உள்ளது. பவுல் இவ்வசனங்களில் யூதர்கள் செய்த பாவங்களைப் பற்றியல்ல, அவர்களின் உள்ளத்தில் இருந்த பாவ எண்ணங்களைப் பற்றியே குறிப்பிட்டுள்ளதாக மாட்டின் லூத்தர் கருதினார் (*Lectures on Romans*, pp. 57-58). யூதர்கள் பத்துக் கற்பனைகளைக் கைக்கொண்டு வாழ்ந்தமையால் அதில் தடைசெய்யப்பட்டிருந்த இப்பாவங்களை அவர்கள் செய்திருக்க மாட்டார்கள் என்றும், பத்துக் கற்பனைகளைக் கொண்டு அவர்களைக் கட்டுப்படுத்தாமல் இருந்தால் யூதர்களும் இப்பாவங்களைச் செய்வார்கள் என்னும் ஆத்தத்திலேயே பவுல் இவ்வாறு எழுதியுள்ளார் என்பது சில வேத ஆராய்ச்சியாளர்களின் தர்க்கமாக உள்ளது. ஆனால், அக்காலத்தில் யூதர்கள் மத்தியிலும் இத்தகைய பாவங்கள் இருந்தது பற்றிய குறிப்புகள் உள்ளன (J.R.Edwards, *Romans: New International Biblical Commentary*, pp. 77-78). எனவே யூதர்களைப் பற்றிய பவுலின் குற்றச்சாட்டு உண்மையானதாகவே உள்ளது. மத்தேயு 23, லூக்கா 11:39-52ல் இயேசுகிறிஸ்துவும் யூதர்களைக் கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். பவுலி குறிப்பிடும் பாவங்களில் விக்கிரகாராதனை யூதர்கள் மத்தியில் காணப்படாததொன்று என்பதனால் சிலர் பவுலின் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள தயங்குகின்றனர். ஆனால் விக்கிரகாரதனை என்பதற்குப் பவுல் மூலமொழியில் உபயோகித்துள்ள பதம் “கோவிலைக் கொள்ளையடித்தல்” அல்லது “புனித ஸ்தலத்தை அசுத்தமாக்குதல்” என்னும் அர்த்தமுடையது (H.G.Liddell & R.Scott, *A Greek-English Lexicon*). விக்கிரகக் கோவில்கைளைக் கொள்ளையிட்டு, அங்குள்ள விக்கிரகங்களை விற்று பணம் சம்பாதித்து வந்த யூதர்கள் அக்காலத்தில் இருந்தனர். இது உபாகமம் 7:25-26ஐ மீறும் செயலாக இருந்தது (F.Josephus, *The Antiquities of the Jews*, 4:207). இவ்வாறு செய்யும் யூதன் விக்கிரகத்தை வழிபடாதபோதிலும், அதனை விலைகொடுத்து வாங்கும் புறஜாதியான் தான் வாங்கிய விக்கிரகத்தை வழிபடுவதனால் யூதனும் விக்கிரகவழிபாட்டுக்கு உட்பட்டவனாக இருப்பதாகப் பவுல் கருதியுள்ளார் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் (Cf. L.Morris, *Romans: The Pillar New Testament Comentary*, pp. 136-137). அப்போஸ்தலர் 19:37ல் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் அக்காலத்தில் யூதர்கள் மீது கோவிற் கொள்ளைக்காரர் என்னும் குற்றம் சுமத்தப்படுவது சாதாரணமான விடயம் என்பதை அறியத்தருவதும் இவ்விளக்கத்தை உறுதிப்படுத்துவதாய உள்ளதாகக் கருதப்படுகின்றது. ஆனால் பெரும்பாலான வேத ஆரய்ச்சியாளர்கள், யூதர்கள் எருசலேம் தேவாலயத்தைக் கொள்ளையிடுவதைப் பற்றியே விக்கிரகாராத னையாக இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளதாகக் கருதுகின்றனர். அதாவது யூதர்கள் தேவனுக்கு கொடுக்க வேண்டியவைகளைக் கொடுக்காமலும், எருசலேம் ஆலயப் பணத்தைக் கொள்ளையிடுவ தையும் பற்றியே பவுல் இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளதாகக் இவர்கள் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாக மல்கியா 1:14லும், 3:8லும் குறிப்பிடப்பட்டுள்ள யூதர்களுடைய வழிபாட்டு முறையும், கி.பி.19ல் எருசலேம் ஆலயத்திற்காகப் பணம் சேகரித்து அதைத் தங்களுக்காக வைத்தக்கொண்ட குற்றத்திற்காக யூதர்கள் ரோமிலிருந்து வெளியெற்றப்பட்டதும் (F.Josephus, *The Antiquities of the Jews*, 18:81-84) ஆதாரமாய் இருப்பதாகக் கூறுப்படுகின்றது (Cf. J.D.G.Dunn, *Romans 1-8: Word Biblical Commentary Volume 38*, pp. 114-115).


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.

அவர்களைக் குற்றவாளிகள் என்றே தீர்த்தது."[117] அக்காலத்தில் விருத்தசேதனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துவந்த யூதர்கள், நியாயப்பிரமாணத்தின் ஏனைய கட்டளைகளை மீறியமையால், அவர்களது விருத்தசேதனத்தில் எவ்வித பிரயோஜன மும் இல்லை என்பதையும் பவுல் அவர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார் (ரோ.2:25-27). "அக்கால யூதர்கள் விருத்தசேதனத்தைப் பரலோகத்திற்கான அனுமதிச்சீட்டாகவே கருதினார்கள்."[118] பரலோகத்தின் வாசலில் நிற்கும் ஆபிரகாம், விருத்தசேதனம் பெறாதவர்களை உள்ளே அனுமதிக்கமாட்டார் என்று அவர்கள் நம்பினார்கள்.[119] விருத்தசேதனம் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தம்மை விடுவிக்கும் செயல் என்பது அக்கால யூதர்களுடைய நம்பிக்கையாக இருந்தது.[120]

அறிமுகப் பகுதி (ரோ.1:1-17)

1. தேவனுடைய நீதியின் அவசியம் (1:18-3:20)
    - (அ). புறஜாதி உலகத்தின் பாவ நிலை (1:18-32)
        - தேவசத்தியத்தை அடக்கிவைத்துள்ளனர் (1:18)
        - தேவவெளிப்படுத்தலை அலட்சியப்படுத்தியுள்ளனர் (1:19-20)
        - தேவமகிமையை அவமதித்துள்ளனர் (1:21-23,25)
        - தேவதண்டனையை அனுபவித்துள்ளனர் (1:24, 26-32).
    - (ஆ). யூத உலகத்தின் பாவ நிலை (2:1-3:8).
        - புறஜாதியாரைக் குற்றஞ்சாட்டிவந்தனர் (2:1-11)
        - புறஜாதியாரைப்போலவே குற்றவாளியாயிருந்தனர் (2:12-24)

Renan, *Saint Paul*, p. 254.

Zahn, Theodore. *Introduction to the New Testament Volume 11*.Grand Rapids: Kregel Publications, 1953.

---

117 C.Vaughan & B.Corley, *Romans, Bible Study Commentary*, p. 36.
118 C.K.Barrett, *Romans: The Harper's New Testament Commentaries*, p. 58.
119 J.R.Edwards, *Romans: New International Biblical Commentary*, p. 79.
120 C.E.B.Cranfield, *Romans: The International Critical Commentary Volume 1*, p. 172.


© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, June 2006.